"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

மலர் 87 ‖ யாழ்ப்பாணம் 1962-ம் ஆ ஆடிமீ 22-ம்உ ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 10 ‖ இதழ் 29

### எதிர்பாருங்கள்!

வருகிறவாரம் இலங்கை முழுவதிலுமுள்ள மரியாயின் சேனையாளர் தங்களது வெள்ளியூபிலி விழாவைக் கொண்டாட விருப்பதை முன்னிட்டு நமது அடுத்தவாரக் காவலன் விசேஷ அனுபந்தத்துடன் வெளிவரும்.

# "பொதுச்சங்கத்தில் கத்தோலிக்கன் ஒவ்வொருவனும் பங்குகொள்ளவேண்டும்" —பரிசுத்த தந்தை



அடுத்துவரும் வத்திக்கான் பொதுச்சங்கம்பற்றி எங்கள் பரிசுத்ததந்தை 23-ம்அருளப்பர் புதியதோர் நிருபமொன்றை அண்மையில் வெளியிட்டுள்ளார். உலகிலுள்ள ஒவ்வொரு கத்தோலிக்கனும் இச்சங்கத்துடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும் என அன்னார் அந்நிருபத்தில் வற்புறுத்துகிறார்,

பொதுச்சங்கம் பாப்பரசருக்கும் மேற்றிராணிமாருக்கும் மட்டுமே உரியதொன்றல்ல; சங்கத்தின்சித்தி கத்தோலிக்க திருச்சபையின் வெற்றிஎன ஒவ்வொருவரும் கருதுதல் வேண்டும். எனவே அதற்காக உதவத்தயாராயிருத்தல் அவசியம்என இந்நிருபம் கூறுகிறது. கத்தோலிக்கர்கள் அச்சங்கத்தில் எவ்விதம் பங்குகொள்ளலாம் என்பதையும் நிருபம் விளக்குகிறது.

1. ஒவ்வொரு கத்தோலிக்கனும் தனது செபஉதவியை அளித்தல்.

2. தபக்கிரியைகளைச் சங்கத்தின் சித்திக்காக ஒப்புக்கொடுத்தல்,

3. சங்கத்தில் பங்குபெறுவோருக்குத் திவ்விய இஸ்பிரீத்துவின் ஞானஏவுதல்கள் கிடைக்க வேண்டுமென நவநாள் நடாத்துதல். (இக்கிரிகைக்குப் பரிபூரண பலன்கள் உண்டு).

4. பிறர்சிநேக முயற்சிகளைச் செய்தல்.

5. ஒவ்வொரு கத்தோலிக்கனும் பாவசங்கீர்த்தனம்செய்து திருவிருந்தருந்தி அருள்நிறைந்த நிலையிலிருத்தல்.

கடைசியாகச் செபமும், தபமுயற்சிகளும், நல்மனதுடன் சடமைகளைச்செய்வதுமே வத்திக்கான் சங்கத்துக்கான சிறந்த ஆயத்த வேலைகள் என்பதைப் பாப்பரசர் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் வருகைக்காகப் பழைய ஏற்பாட்டின்பிதாக்கள் தபஞ்செய்ததை எடுத்துக்காட்டுகிறார். கிறிஸ்து வந்தபின்னரும் தபத்தின் அவசியம் நன்குபிரகடனப்படுத்தப்பட்டது. அப்போஸ்தலர்களாலும் அவர்களைப்பின்தொடர்வோராலும் அதன் அவசியம் வற்புறுத்தப்பட்டுவந்துளது என்பதையும் நிருபம் மேலும் குறிப்பிடுகிறது

## இளவாலை அர்ச். என்றியரசர்கல்லூரிப் பரிசளிப்புவிழா

# "கிறிஸ்தவ ஒற்றுமை சாத்தியமானதே"

—அதிசங். குலேந்திரன்

கிறிஸ்துவை வழிபடும் கத்தோலிக்கர்கட்கும் இதர கிறிஸ்தவர் கட்குமிடையில் மதவழிபாடுகள் சம்பந்தமாக அனேக விடயங்களில்ஒற்றுமைகள் உண்டு. வேற்றுமைகள் மிகச்சிலவேஎன தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சகரான அதிசங். பிஷப் குலேந்திரனவர்கள் சென்ற சனிக்கிழமை இளவாலை அர்ச் என்றியரசர் கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர்மேலும் கூறியதாவது.

கிறிஸ்துவ ஒற்றுமைபற்றி இக்காலத்தில் மிகஅதிகமாகப் பேசப்படுகிறது. கிறிஸ்து அருளிச்செய்தமதம் ஒன்றே. எமது மதத்துக்கும் கத்தோலிக்க மதத்துக்குமிடையேயுள்ள பிரச்சினைகள் மிகப்பெரியவையல்ல; அவை நாளடைவில் தீர்க்கப்பட்டு விடும்என எண்ணுகிறேன்.

அத்தியட்சகர் அவர்கள் தமது சொற்பொழிவில் தாம் அக்கலாசாலையில் முன்னர் ஆசிரியத் தொண்டாற்றியதைக் குறிப்பிட்டார். தேசியகல்வி, கிறிஸ்தவ குருக்களின் சேவை முதலியவற்றை வர்ணித்தார். ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தினர்.

பரிசளிப்புவிழாவுக்கு விக்கார் ஜெனறல் சுவாமியார் அதி வண. லெக்குத்தூர் தலைமை வகித்தார். தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சகரான அதிசங். பிஷப் குலேந்திரனவர்கள் பிரதான விருந்தினராக அங்கம்வகித்தார். கல்லூரி அதிபர் வண. பிதா எல். ஏ. சிங்கராயர் அவர்களால் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. திருமதிகுலேந்திரனவர்கள் பரிசில்களை வழங்கினார்கள். திருவாளர் ஏ சிவகுரு அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது. இளவாலை திருக்குடும்பக்கன்னியர்மடத்து மாணவர்களால் நடிக்கப்பட்ட "Falsely Accused" என்னும் ஆங்கிலநாடகத்துடன் பரிசளிப்புவிழா இனிதே முடிவுற்றது.

## கோவைப் பாடசாலைகளில் மதக்கல்விக்குத்தடை

கோவைத் தேசாதிபதி இந்திய லெவ்ரினன் தும்குக் சிவசங்கர் அப்பகுதியிலுள்ள அரசாங்கபாடசாலைகளில் மதக்கல்வி யூட்டுவதைத் தடைசெய்திருக்கிறார்

தனியார் பள்ளிக்கூடங்களில் பாடநேரத்தின் பின்னர், பெற்றோர் எழுத்தில் விண்ணப்பித்தால் மாத்திரம் மதக்கல்வியூட்ட உத்தரவு விதித்திருக்கிறார்.

இந்தியாவுடன் சேர்க்கப்பட்டுள்ள 650,000மக்களுள் மூன்றில் ஒருபங்கினர் கத்தோலிக்கர்.

# பார்வையாளர்களில்

## இலங்கையரும் ஒருவர்

வத்திக்கானில் வருகிற ஐப்பசியில் கூடவிருக்கும் பொதுச்சங்கத்தின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கென ஆங்கில திருச்சபையினர் அனுப்பவிருக்கும் 3 பார்வையாளர்களில் இலங்கையைச் சேர்ந்த வண. கெறல்ட் டி சொய்சாவும் ஒருவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் கொழும்புப்பகுதியின் பிரதம தியாக்கோன் ஆவர். ஐப்பசிமாதத்தின் முற்பகுதியில் ஆகாயவிமானமூலம் இவர் ரோமை செல்வார்.

எங்கள் இரு மதங்கட்குள்ளும் உள்ள சில வேற்றுமைகள்பற்றி மனப்பூர்வமாக ஆராய இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும் என இவர் தமதுநியமனம்பற்றிக் கூறுகையில் குறிப்பிட்டார். முதல்தடவையாகக் கத்தோலிக்க பொதுச்சங்கத்தில் பார்வையாளர்களாகப் பிறமதத்தினர் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இச்செய்தியை நானும் எனது திருச்சபையும் வரவேற்கிறோம். கிறிஸ்தவ ஒற்றுமைகட்கான சாத்தியக்கூறுகளை இச்சங்கம் ஓரளவு துலாம்பரப்படுத்தும் என எண்ணுகிறேன் என வண. சொய்சா மேலும் குறிப்பிட்டார்.

# தவழ்ந்து சென்றார் அவஸ்தைக்கு

போர்த் பாலத்தின் இடிந்த கட்டுகள், வளைந்துமுறிந்த இரும்புக் கேடர்கள், கம்பிகளுக்கிடையில் அகப்பட்டுக்கிடந்த இருவருக்கு அவஸ்தைகொடுக்க, அங்கு தவழ்ந்து சென்றார் வண. டானியெல் பொயில் சுவாமியார். படுகாயப்பட்டிருந்த அவ்விருவரும் உயிருடன் வெளியேற்றப்பட்டனர்.

குடும்பத்தவர்களான வேறு இருவர் உயிர்இழந்தனர். சுவாமியார் தவழ்ந்து சென்றுகொண்டிருக்கும்பொழுது பாலம் மேலும் இடியுமாப்போல இடி

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது ஆபிரிக்கயாத்திரை–6

# ஓர் பயங்கர அனுபவம்

— வண. பிரான்சிஸ் ரிப்ளேஅடிகளார்

நண்பகலில் ஜிபிரோல்ரரிலிருந்து 385மைல் தொலைவையடைந்துவிட்டோம். ஜெனோவா எமக்கு முன்பாக 465மைல்தூரத்தில் உள்ளது.

உலகப்புகழ்பெற்ற ஜெனோவாவை எமது நாவாய் வியாழக்கிழமை மாலையில்சேரும். பின்னர் சனிக்கிழமையே அங்கிருந்து மீண்டும் புறப்படும. அதுவரை பிரயாணிகள் தமக்கிஷ்டமான விடங்களுக்குச் செல்லலாம். எனவே கப்பலின் மேற்றளத்தில் ஜெனோவாவைப்பற்றிய பேச்சுக்களே அதிகமாக இடம்பெற்றன.

ஒரு குழுவினர் ரோமைக்குச்செல்வது எனத் திட்டமிட்டனர். சிலர் மொன்ரே கார்லோவில் உல்லாசமாகப் பொழுதுபோக்க எண்ணினர். புளோரன்சில் அல்லது பிசாவில் இத்தினங்களைக் கழிப்பதுஎன வேறுசிலர் முடிவுசெய்தனர்.

ஜெனோவா நகரின் பெருமையையும், சிறப்புகளையும் விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகளும், சுலோகங்களும் கப்பலின் பலபாகங்களையும் அலங்கரித்தன. அந்நகரின் முக்கியதலங்களைக் குறிக்கும் வழிகாட்டுப்படங்களும், துண்டுப்பிரசுரங்களும் இலவசமாக் வழங்கப்பட்டன. தற்காலத்தில் உல்லாசப்பிரயாணங்கள் எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளன என்பதைச் சிந்திக்கும்போது ஆச்சரியமாகவிருக்கிறது. உலகின் மகிழ்ச்சிகரமான, பொழுதுபோக்கக்கூடிய தலங்களையெல்லாம் பார்க்க–அனுபவிக்க முடியாதவர்கள்கூட இப்பிரசுரங்களை உற்றுநோக்குவதன்மூலம் மனோரதத்தில் அவ்விடங்களுக்குச் சென்றுமீளலாம்.

கடந்த 24மணித்தியாலங்கட்குள் இத்தாலியின் ஒவ்வொரு நகரைப்பற்றியும் யாதாவதொருவர் கப்பலில் பேசிக்கொண்டிருந்ததையே கேட்க முடிந்தது. இதிலிருந்து இத்தாலியின் ஒவ்வொரு நகரைப் பற்றியும் ஓரளவு அறியக்கூடியதாயிற்று. வயோதிபரான ஒரு கனவான் எனக்கும் ஒரு வழிகாட்டுப்பிரசுரத்தைக் கொடுத்தார். புளொரன்ஸ் நகரைப் பற்றியது அது. சிறிது காலத்துக்கு முன்னர் அச்சடிக்கப்பட்ட பிரசுரம், என்றாலும் இப்போது அதிகமான மாற்றங்களில்லை என்றார் அந்தக்கனவான். யானும் பிரசுரத்தைக் கவனித்தேன். 1905இல் அச்சடிக்கப்பட்ட நூல் அது எனக்கண்டு ஆச்சரியமுற்றேன்.

உலகம் எவ்வளவு சிறியது என எங்கள் நாவாயில் அடிக்கடி கூறப்பட்டது. அவ்வாக்கியங்களில் அர்த்தமிருப்பதாக எனக்குத் தோன்றியது. லங்காஷயரைச் சேர்ந்த யான் கென்யா கோட்டைஎன்ற நாவாயில் ஆபிரிக்காவைநோக்கிச் சென்றுகொண்டிருக்கிறேன். உலகின் முக்கிய பிரதேசங்களைச்சேர்ந்த பலகனவான்களும், சீமாட்டிகளும் என்னுடன் பிரயாணம் செய்கின்றனர். அவர்களுடன் பழகுவதில் ஏராளமான அனுபவங்களைப் பெறக்கூடியதாகவுள்ளது.

அதிகாலையில் கடல் மி[illegible] அமைதியாகக் காணப்பட்டது. ஆயின் மாலையில் அந்தநிலை மாறிவிட்டது. அலைகள் வானளாவிக் கொந்தளித்தன. அவற்றின் எதிரொலிப்பு எங்கள் கப்பலை ஆட்டி அசைத்தது.

கப்பலின் ஊதுகுழல் அவசரநிலையொன்றைத் தெரிவித்தது. தீயணைக்கும் படையினரும், மாலுமிகளும் தீவிரமாக அங்குமிங்கும் சென்றுகொண்டிருந்தனர். கொடிய புயலொன்று கப்பல்செல்லும் திசையில் வந்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. எல்லா அறைக்கதவுகளும் சாத்தப்பட்டன. ஆபத்துவேளையில் உதவும் சிறுபடகுகள் அனைத்தும் கடல்மட்டத்துக்கு இறக்கப்பட்டன.

பகலவன் குடதிசைக்குச்சென்ற சிறிது நேரத்தின்பின்னர் பலமான காற்றுவீசியது. புயலின்தோற்றம் சிறிதுசிறிதாகச் கப்பலைநோக்குவதை உணரக்கூடியதாயிற்று. யானும் இறைவனில் என்னை ஒப்படைத்துப் படுக்கைக்குச் சென்றேன்.

**28 சித்திரை 1960.**

புயல் மிகஉக்கிரமாக வீசிக்கொண்டிருந்தபோது என்னால்உறங்கமுடியவில்லை. கடிகாரம் அதிகாலை 3மணியெனக்காட்டியது. பொங்கியெழுந்த அலைகள் கப்பலின் ஒவ்வொருபக்கத்தையும் பலமாக ஆட்டிஅசைத்தன. புயலின் பேய்க்குரலும், அலைகளின் பயங்கரசப்தமும் ஒன்றுடனொன்று மோதி இடிமுழக்கத்தைவிட அதிக பயங்கரத்தை அளித்தது. இரவின் நிசப்தம இக்காரணங்களால் ஓடியொளிந்துவிட்டது. அதிர்ஷ்டவசமாக உறக்கம் என்னையாட்கொள்ள மீண்டும் படுக்கையில் சரிந்தேன்.

காலை ஏழுமணியளவில் எனது பணியாளன் கையில் தேநீருடன் என்னை எழுப்பினன். இரவின் பயங்கரத்தையிட்டு அவனுடன் சம்பாஷித்தேன். தனக்கு எவ்வித பயங்கரமும் தோன்றவில்லைஎன அவன் பதிலளித்தான். ஆயின் காலையாகாரத்தின்போது இரவின் அனுபவங்களையே பிரயாணிகளின் கலந்துரையாடலில் கேட்கக்கூடியதாயிற்று.

ஜெனோவாவுக்குச் செல்லும்போது தங்கள் லிகிதங்களை அனுப்புவதற்குத வியாகப் பிரயாணிகள் இத்தாலிய தபால்தலைகளை வாங்கிக்கொள்வதற்காகப் பண்டகசாலையில் திரண்டுநின்றனர். இத்தாலிய நாணயமாற்று விபரங்கள் சுவரொட்டிகளில் காணப்பட்டன. பிரயாணிகளைக்கப்பலிலிருந்து அவர்கள் விரும்பிய இடங்கட்குக் கொண்டுசெல்லவும், மீண்டும் கப்பலுக்குச் சேர்க்கவும் உரியமுறையில் சேவையாற்றும் யாத்திரை நிறுவனங்களின் பிரதிநிதிகள் பிரயாணிகட்கு வேண்டிய தகவல்களனைத்தையும் தெரிவிப்பதில் முனைந்தனர்.

வரலாற்றுச் சிறப்புப்பெற்ற ஜெனோவாநகரம் பகலவனின் ஒளியில் வெகுதூரத்தே தோன்றியது. சிறிதுசிறிதாக அதன் அழகுமிக்க தோற்றமும், வானளாவிநிற்கும் கட்டடங்களின் எழில்மிக்க காட்சியும் எம்மைக் கவர்ந்தன. ஒவ்வொருவரும் அந்நகரை எப்போது சேர்வோம் எனத்துடித்துக் கொண்டிருந்தனர். இரவுவீசிய புயலின் காரணமாக ஏற்கனவே திட்டமிட்டநேரத்திலும் சிலமணித்தியாலங்களின் பின்னரே ஜெனிவா துறையை அடையமுடிந்தது. எனவே இரவுப் புகைவண்டியைப்பிடிக்க விரும்பிய பலருக்கு அதுபெரும் ஏமாற்றத்தை அளித்தது.

—வளரும்.

அடுத்த வாரம் ஜெனிவாநகரின் சிறப்புகளைப்படிக்கத் தவறாதீர்கள்.

### நன்றித்துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதாவின் வேண்டுதலாலும், எனக்குவந்த கடுமையானவருத்தம் சுகமடைந்ததற்கு என்மனமார்ந்த நன்றித்துதியை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இன்னும் எனக்குப் பூரணசுகத்தைத் தரும்படி மன்றாடுகிறேன்.

பேசாலை [illegible]

பண்டிதர்

பி. சவிரிமுத்துஅவர்களின்

## தேகவியோகம்



யாழ்நகர் கத்தோலிக்க சமூ மக்கள் மத்தியில் பெயரும், புகழும் பெற்றுப் பல பத்தாண்டுகளாகக் காலைப்பூசை, மாலைநற்கருணைச் சந்திப்பு முதலிய பக்திமுயற்சிகளில் தவறாது உத்தம கத்தோலிக்க சீவியம நடத்தித் தமது 83-ம்வயதில் பண்டிதர் பி.சவிரிமுத்து என்னும் பெரியார் ஆனிமாதம் 27-ம் திகதி புதன்கிழமை இரவு பத்துமணியளவில் கடைசித் தேவதிரவிய அநுமானங்கள் அனைத்தும் நல்லறிவுடன் பெற்றுப் பரமபதம் அடைந்தார். இவர் கத்தோலிக்க மணம் கனிந்த நாரந்தனைவாசர் திரு. பேதுருப்பிள்ளை என்பவருக்கும், இளவாலைப்பதியில் தோன்றிய கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த திருமதி ஆனப்பிள்ளை முத்துக்குட்டிஎன்பாருக்கும் 1879-ம் ஆண்டில் அருந்தவப்புதல்வனாய் அவதரித்தார். கத்தோலிக்க சூழலகளுக்கிடையில் தமது ஆரம்பக்கல்வியை நாரந்தனைக் கத்தோலிக்க பாடசாலையிலும், உயர்தரக் கல்வியைக்கொழும்புத்துறைசஞ்சூசையப்பர் கலாசாலையிலும் கற்றுத்தேறிப் பயிற்சிபெற்ற ஆசிரியராய் வெளிப்போந்தார்.

இவருடைய சிறப்புவாய்ந்த ஆசிரியத்தொண்டு நெடுந்தீவில் தொடங்கி, நீர்கொழும்புத்தமிழ்ப்பாடசாலையிலும், தமிழ் ஆசிரியர் கல்லூரியிலும் விளைந்து, சம்பத்திரிசியார் கல்லூரியில் கனிவெய்தியது. இலக்கண, இலக்கியங்களில் நன்கு பாண்டித்தியம் அடைந்த இவரை எல்லாச் சாகியத்தினரும் பண்டிதர் சவிரிமுத்து என்னும் கௌரவப்பட்டம்வழங்கிச் சன்மானித்தனர். தமிழிலே பகிரங்கமேடையில் பேசுவோர் அருகியிருந்த இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் கருத்தழகும், சொல் இன்பமும் கலந்த சொற்பொழிவாற்றுவதில் ஒருசிறந்த நாவலராய் இவர் திகழ்ந்தார். முறைப்படி ஆங்கிலம்கற்காவிடினும் தமது விடாமுயற்சியால் ஆங்கிலஞானம்பெற்றஇவர் சமயபோதகம், அரசியல் ஞானம் கொண்ட நூல்களின் சாரத்தைத் தீந்தமிழில் மொழிபெயர்க்கும் திறமை வாய்ந்தவராய் விளங்கினர்.

நெடுங்காலம் சம்பத்திரிசியார் கல்லூரியில் தலைமைத் தமிழ் ஆசிரியராய்க் கடமையாற்றுவதில் மாத்திரம் இவரது சமூகத்தொண்டு நின்றுவிடவில்லை. யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாப சங்கம், அடைக்கலநாயகி சகாயநிதிச் சங்கம் முதலிய ஏழைமக்களின் தங்கச் சுரங்கங்களுக்கு அடிகோலியவர்களுள் இறுதிவரையும் கற்றூண்போலநின்று அலுக்காது சலிக்காது இவர் உழைத்தவர் என்பதைச் சகலரும் ஒப்புக்கொள்வர். கத்தோலிக்கமக்களுக்கு அநுகூலமான எவ்வித முயற்சிகளிலும் முன்னணியில் நின்று தமது எழுத்தாலும், பேச்சாலும் சேவைபுரிந்த உத்தமர்களில் பண்டிதர் சவிரிமுத்துஅவர்களும் ஒருவர்என்றால் மிகையாகாது.

சம்பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்ற முதற் களியாட்டுவிழாவின் போது இவர்பிரசாரப்பகுதியில் இன்பம் கனிந்த பாடல்களை இயற்றிச் சனங்களுக்கிடையில் ஆர்வம் ஊட்டுவதிலே சிறந்து விளங்கினர். அரசாங்கசபைத் தேர்தல் மேடைகளில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் ஆணித்தரமானவை, அந்நாட்களில் மேடைப் பேச்சாளர்களுக்கு உதவும் பொருட்டு ஒரு சொற்கோர்வையும் எழுதி வெளியிட்டார். இப்பெரியாரை இழந்து வருந்தும் புத்திரி திருமதி மேரி யோசேப்பின், பரிமளம் இராயப்பு, மருமகன் திருவாளர் சூசைப்பிள்ளை இராயப்பு, மகன் யோசெவ் இராஜபூபதி, மருமகள் திரேசா, பௌத்திரர், பௌத்திரிகள், மற்றும் இனசனர், சிநேகிதர் முதலியோருக்கு அநுதாபம் தெரிவித்து, இவருடைய ஆன்மா சாந்தியடையுமாறு இறைவனைப்பிரார்த்திப்போமாக.

தாண்டவன்வெளிச் செய்தி

## சற்பிரசாதத் திருநாள்

தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சற்பிரசாதத் திருநாள் அதிபக்தி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை 5-15-க்கு முதற்பூசையும் 7மணிக்கு இரண்டாம் பூசை பாடற்பூசையுமாக வண. கட்டளைக்குரு ஜோர்ஜ ஈ எல். வம்பேக் சுவாமி அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இருபூசைகளிலும் "சற்பிரசாதநாதர் நமக்காக இரவுபகலாய்க் காத்திருக்கிறார்; அவரிடம் போவோம்" என்னும் விடயம்பற்றிக் கட்டளைக்குரவர் அவர்களால் பிரசங்கம் சொல்லப்பட்டது. அன்றுதினம் வழமையிலும் அதிகமானோர் திவ்வியநற்கருணை பெற்றுத் தம்மைச் சற்பிரசாதநாதருக்கு அர்ப்பணித்தனர்.

பூசைமுடிவில் சிவப்பு வெள்ளை மலர்களால் அழகுற அலங்கரிக்கப் பட்டிருந்த பீடத்தில் திவ்விய சற்பிரசாதநாதர் எழுந்தருளப்பட்டார். அன்று நாள்முழுவதும் சற்பிரசாதநாதரைப் பங்குக்கிறிஸ்தவர்களும், மரியாயின் சேனையினரும், மாதாசபையினரும், பாடசாலை மாணவ, மாணவிகளும், ஏனையகத்தோலிக்க சங்கத்தாரும் இடையறாது பயபக்தியுடன் சந்தித்தனர்.

பிற்பகல் 4-30மணியளவில் பாடசாலை மாணவர்களும், கத்தோலிக்க சங்கத்தினரும் வெண்ணிறக் கடுதாசிகளாலும், மலர்களாலும், தோரணங்களாலும் அழகுற அலங்கரித்த ஆலயத்தைச்சுற்றிச் சுற்றுப்பிரகாரம் நடந்தது. சற்பிரசாதநாதர் வீற்றிருந்த கதிர்ப்பாத்திரத்தை வண. ஜெரோம் டீ சா சுவாமிஅவர்கள் காத்தேந்திவர, வண. கட்டளைச்சுவாமி, வண. டபிள்யு. ஜே. நீ சுவாமிஉதவியாகவரச் சிறுவர் வெண்மலர் தூவிவந்தகாட்சி காண்பதற்கு மோட்சவாசல்போல்இருந்தது. அவ்வேளை குருக்களும், சந்நியாசிகளும், கன்னியரும், பாடசாலை மாணவ, மாணவிகளும் அதிகமாய்ப் பங்குபற்றிச் சற்பிரசாதநாதரைப் பாக்களால் வாழ்த்திச் சென்றனர்.

சுற்றுப்பிரகாரம் ஆலயத்தை அடைந்ததும் 'தெதேயும்' என்னும் கீதம்பாடப்பட்டுச் சற்பிரசாத ஆசீர்வாதமும் அளிக்கப்பட்டுத் திருநாள் இனிது முடிவுற்றது.

—நிருபர்

## சத்தியத்தின் சாட்சிகள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

"நரகத்தின் வாசல்கள் அதனை மேற்கொள்ள மாட்டாது" என்றார் யேசு. அந்த அமுதவாக்குப் பொய்க்குமா? விமலதர்மன், சங்கிலியன் போன்ற எத்தனைகோடி வேத விரோதிகள் தோன்றினாலும் கிறிஸ்தவ சமயத்தை அழிக்க முடியாது. இத்தனை எதிர்ப்புகளின் மத்தியிலும் சத்தியமறைத்தீபம் அணையாது பிரகாசத்துடன் ஒளிவிடத்தான் செய்கிறது.

ஏ. எம். அல்பேட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

வருடத்திலே இரண்டாம்முறையாக நடக்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு சென்ற16-ந்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. அதிலே விசாரணை நடத்தவந்திருந்த நீதியரசர் எச். என். ஜே பெர்னாண்டோ அவர்கள் அன்றுகாலை 10-30மணிக்குத் தமதுபரிவாரசமேதராய் ஆசனக்கோவில வந்துசேர்ந்ததும் அங்கே பலகுருமாரும், சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களும், மற்றேனையோரும் பெருந்திரளாகச் சமுகமளித்திருக்கத் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து ஆசீர்வாதம் வழங்கப்படலாயிற்று. அத்தருணம் கல்லூரி மாணவர்கள் வண. ஜோண்மேரி சுவாமியவர்கள்தலைமையில் ஓரேகுரலாய் இன்பகரமாகத் திவ்வியகீதங்கள் பாடித் தேவஆராதனையைச் சிறப்பித்தார்கள். நீதியரசர் ஆசிபெற்றுத் தேவஉதவியை இரந்துகொண்டு சென்று விசாரணையை ஆரம்பித்தார்.

## செம்மணிப்பாலம்

சென்றஇருவருடங்களாகப் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டிருந்ததும், யாழ்ப்பாணம்–கண்டிவீதியிலுள்ளதுமான செம்மணிப்பாலம் இம்மாதக்கடைசியிலே போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படுமெனத் தெரியவருகிறது.

## கிறிஸ்தியன் பிறதர்மாரின் அதிசிரேஷ்டர்

உலகின் பல்வேறுநாடுகளிலும் சிறப்பாகக் கிறிஸ்தவ கல்வித்தொண்டு ஆற்றிவருகின்ற கிறிஸ்தியன் பிறதர்மார்சபை அதிசிரேஷ்டரான மகாசங். நைசெற் யோசெவ்பிறதர் அவர்கள் சென்றவியாழக்கிழமை சபையின் துணைஅதிசிரேஷ்டரான சங். லோறென்ஸ் ஒ, ரூல்பிறதர் அவர்கள் சமேதராய்க் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கியபோது சபையின் மாகாணதரிசகரான சங். வின்சென்ற் யோசெவ்பிறதராலும், மற்றும் அநேக பிரமுகர்களாலும், பிறராலும் ஆடம்பரமாக வரவேற்கப்பெற்றார். பின்னர் அங்கிருந்து அவர் முகத்துவாரத்திற்கு அழைத்துக்கொண்டு போகப்பெற்றதும் டி லா சால் பழையமாணவர் ஐக்கியசங்கத்தாலும், டி லா சால் கல்லூரிமாணவர்களாலும் சிறந்த ஒரு வரவேற்புஉபசாரம் நடத்தப்பட்டது. ஒருநூற்றாண்டுகாலத்தில் இலங்கைக்குவிஜயஞ்செய்துள்ளகிறிஸ்தியன் பிறதர்மார்சபையின் முதலாவது அதிசிரேஷ்டர்இவரே. இங்கே இவர் மூன்றுவாரங்கள் தங்கியிருந்து தமது சபைபிறதர்மாரின் நிவாசங்களையும், கல்விஸ்தாபனங்களையும் தரிசித்துக் கொண்டு திரும்புவார்.

## இளம்பிள்ளை வாதநோய்

யாழ்ப்பாணத்திலே இளம்பிள்ளை வாதநோயால் பீடிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின்தொகை 247பேராக அதிகரித்துள்ளது. இந்தநோயால் மேலும் ஒருபிள்ளை இறந்துபோயிருக்கிறது. இது கண்டவர்களில் பெரும்பாலார் ஐந்துவயதுக்கு உட்பட்டவர்களே. நெடுந்தீவிலோர்ஒருவாரத்தில் நான்கு பச்சிளம்பாலர் இந்தநோய்க்குப் பலியாயினர். இந்நோயின் அறிகுறிதோன்றியதும் ஆங்கிலமுறைப்படி தக்க வைத்தியம் செய்யாதிருப்பதாலேயே அதுபரவுகிறது. இதனைத்தடுப்பதில் வீட்டுக்குவீடுசென்றும், பாடசாலைகளுக்குச்சென்றும் மருந்துகொடுத்துச் சுகாதாரப்பகுதி செய்யும் உதவியை மக்கள் பயன்படுத்தவேண்டியது அவசியமாகும்.

## குடிதண்ணீர்ப்பஞ்சம்

நெடுநாள் மழைபெய்யாத காரணமாக நிலவிவரும் நீடியவரட்சியாலே புங்குடுதீவிலும், நெடுந்தீவிலும் பல கிராமங்களிலே குடிதண்ணீர்ப்பஞ்சம் தலைகாட்டியுள்ளது. நெடுந்தீவுகிழக்கு நடுக்குறிச்சி ஆதியாமஇடங்களில் ஒரு குடமதண்ணீர் 13சதமாக விலைப்படுகிறது. தண்ணீர்பெறுவதற்காக மக்கள் நெடுந்தூரம் நடந்துசெல்லவேண்டிய சங்கடநிலை ஏற்பட்டுள்ளது. எழுவைதீவிலும் குடிதண்ணீர்ப் பஞ்சமுண்டாய் மக்கள் கடல்நீரைப் பருகவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாம்.

## ஜப்பானிய சமாதானதூது

ஜப்பானிலிருந்து மூவரைக்கொண்ட சமாதான தூதுக்கோஷ்டி ஒன்று இதுவரை சிங்கப்பூர், மலாயா, இந்தியா, பர்மா, ஹொங்கோங்முதலாம் நாடுகள்கண்டு சென்றசனிக்கிழமை இலங்கைவந்து சேரலாயிற்று. இக்கோஷ்டியின்தலைவர் கனம். ஜியொற்த என்சாற்றோஎனும் புத்தகுரு. மற்றிருவரில்ஒருவர் ஒருபொருளாதார பட்டதாரியான திரு. யுசோ சாற்றோஎன்ற கத்தோலிக்கபிரமுகர். மற்றவர் ஒரு பட்டதாரிமாணவரான திரு. ரி. யமாசாகிஎன்பவர். இவர்கள் உலகின்பல நாடுகளுக்கும்சென்று அணுக்குண்டு ஆயுதங்கள் பாவிப்பதை எதிர்க்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்ளும்முகமாகச் சென்றமாசிமாதம் 6-ந்திகதி ஜப்பானிலே அணுக்குண்டால் தாக்குண்டு பரிநாசமடைந்த ஹிறோஷிமா நகரிலிருந்து புறப்பட்டவர்கள்.

## பாடபுத்தக விலக்கு

எஸ். எஸ். சி. வகுப்புக்குரிய பாடபுத்தகமாக வித்தியாதிபதி திரு. எஸ். எவ். டி சில்வா 1947-ம்ஆண்டுஎழுதிய "இலங்கை–உலகசரித்திரம்" என்ற நூலின் திருத்திப்பிரசுரஞ்செய்த 1961-ம்ஆண்டின் புதியசிங்களப்பதிப்பைப் பாடபுத்தகமாக உபயோகியாது கல்விமந்திரி தடைவிதித்திருக்கின்றார். 1956-ம்ஆண்டுக்கும், 1960-ம்ஆண்டுக்கும் இடைப்பட்டகாலச் சரித்திரப் பகுதிகள் இந்தப்பாடபுத்தகத்தில் சரித்திரஆசிரியருக்குத் தெரியாமலே பதிப்பாளரால் திரித்துக்கூறப்பட்டிருப்பதாகக் கல்விமந்திரி தெரிவிக்கின்றார். ஆயினும் கல்விப்பிரசுரசபை இதனை 1967-ம்ஆண்டு முடிகிறவரை ஒருபாடபுத்தகமாக ஏற்கனவேஅங்கீகரித்திருக்கிறது.

## இந்திய கப்பற்சேவை

தலைமன்னாருக்கும், தனுஸ்கோடிக்குமிடையே புகையிரதஇணைப்பு–மோட்டர்படகுப் போக்குவரத்துச்சேவை வழமைபோல நடைபெறுமென்று இந்தியஅரசாங்கம் தற்போது தெரிவித்துள்ளது. இம்மாதம் 17-ந்திகதி முதல் இந்தப்போக்குவரத்துச் சேவையை வாரத்திற்கு மூன்றுமுறையாகக் குறைத்துவிட இந்தியபுகையிரதப்பகுதி சமீபத்திலே முடிவுசெய்திருந்தது.

## இலங்கையருக்கே லைசென்ஸ்

முட்டைகள், உணவுப்பொருட்களுக்கான வித்துகள், ஈரவெங்காயம் தவிர்ந்த ஏனையவெங்காயவகைகள், அரிசிஉபபொருட்கள், எள்ளுநீங்கலாக எண்ணெய்உற்பத்திக்கான ஏனையவித்துக்கள், கைக்கடிகாரங்களின் உதிரிப்பகுதிகள்,கற்பூரம் ஆதியபொருட்களை இலங்கையில் இறக்குமதிசெய்வதற்கான லைசென்ஸ்கள் இனிமேல் பதிவுசெய்யப்பட்ட இலங்கையரான வர்த்தகர்களுக்கே அளிக்கப்படுமென்று "கெசற்" றில் பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது.

# உருளும் உலகில்

## ● புருக்லின்

ஐக்கிய அமரிக்காவைச்சேர்ந்த புருக்லின் நகரில் அண்மையில கன்னியர் மடமொன்றில் பெருந்தீபற்றிக் கொண்டது. விரைவாகத்தீயணைக்கப்பட்டதெனினும் கன்னங்கரேலெனச் சூழ்ந்திருந்த புகைமண்டலத்தால் மடத்தினுளிருந்தோரைக்கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயினும் வேதனையைப் பொருட்படுத்தாது ஒருவர்கையைமற்றவர் பற்றிப்பிடித்தவண்ணம் அங்கிருந்த 38 கன்னியர்களும் வெளியேறியமையால் அவர்களுயிர் காப்பாற்றப்பட்டது.

## ● கனேவர்

அடுத்த ஆவணிமாதம் 22-ந்தேதி தொடக்கம் 26-ந்தேதிவரை ஜெர்மானியதேசிய கத்தோலிக்க விழாவொன்று கனேவர் நகரில நடைபெறவிருக்கிறது. இவ்விழாவுக்கென 41 விசேட ரயில்வண்டிகள் பிரயாணிகளை ஏற்றியிறக்குவதற்காக அமர்த்தப்பட்டுள்ளன. இவ்விழாவுக்காக ரயிலில் செல்லுவோரின் பிரயாணக்கட்டணமும் அரைப்பங்காகக் குறைக்கப்பட்டுள்ளது.

## ● நியூயோர்க்

சென்ற வருடத்தில கியூபாவில் நடாத்தப்பட்ட சுதந்திரப்போராட்டத்தின்போது கைதுசெய்யப்பட்ட தேசிய வீரர்களை விடுதலைசெய்வதற்காகத் திரட்டப்பட்டுவரும் நிதிக்கென நியூயோர்க்நகர அதிமேற்றிராணியாரானகர்தினுல் ஸ்பெல்மன் ஆண்டகை 5000 டாலர்களை உதவியுள்ளார். இக்கைதிகளை விடுவிப்பதெற்கென மொத்தமாக 620 இலட்சம் டாலர்கள் தரப்படல்வேண்டுமென கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ குறிப்பிட்டிருக்கிறார்.

## ● இங்கிலாந்து

இங்கிலாந்தின் பிரசித்திபெற்ற கத்தோலிக்க வாரப்பத்திரிகைகளில் ஒன்ருன கதலிக் கெரால்டின் ஆசிரியரான கவுண்ட் மைக்கல் பியாடோயர் அண்மையில் தமது பதவியினின்றும் இளைப்பாறியிருக்கிறார். இருபத்தெட்டு வருடங்களாக இவர் அப்பத்திரிகையைத்திறம்பட நடாத்தியுள்ளார். ஒய்வுபெற்றபின் கண்டடைதல் என்ற நாமத்துடன் ஒரு மாதாந்த கத்தோலிக்க செய்திச்சஞ்சிகையைப் பிரசுரிப்பதென இவர் திட்டமிட்டுள்ளார்.

## ● அவுஸ்திரியா

ஆபிரிக்காவில் கத்தோலிக்க அச்சுப்பிரசுர சேவையில் குறிப்பிடத்தக்க தொண்டாற்றிவரும் புனித கிளாவர் இராயப்பர் சபைக்கன்னியர்கள் அவுஸ்திரியாவில் பல் இளம் கன்னியர்களை அச்சுப்பிரசுர சேவைக்கெனப் பயிற்றிவருகின்றனர். இவ்வாலைகள் பின்னர் ஆபிரிக்காவில் பத்திரிகாசிரியர்களாகவும், சஞ்சிகை நிர்வாகிகளாகவும், நிருபர்களாகவும் தொண்டாற்றுவர்.

## ● தென்னுபிரிக்கா

தென்னுபிரிக்க அரசாங்க சபைக்கென அண்மையில் நடாத்தப்பட்ட உபதேர்தலொன்றில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 36 வயதுநிரம்பிய திரு. கோர்கியோபி நல்ல கத்தோலிக்கர். சிறந்த வழக்கறிஞர். 160 அங்கத்தவர்களைக்கொண்ட அரசாங்கசபையில் கடந்த பதினுன்குவருடங்களின் பின் அங்கத்துவம வகிக்கும் முதற்கத்தோலிக்கர் இவரே. இவர் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்.

## ● பிரான்ஸ்

பாப்பரசரின் பிரதிநிதியாகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதிமேற்றிராணியார் பாலோ பேட்ரோலி பிரான்சிய அதிபர் சாள்ஸ் டி காலேயிடம் தனது அதிகாரப்பத்திரங்களைச் சமர்ப்பித்தபின் அன்னாரைக் கௌரவிக்குமுகமாக அதிபரின் உத்தியோகபூர்வமான எல்சி மாளிகையில் அண்மையில் மாபெரும் விருந்துவைபவமொன்று நடாத்தப்பட்டது.

## ● பிறேசில்

பிறேசில் தேசத்தின் மேற்றிராணிமார்கள் அத்தேசத்தில் கடமையாற்றும் குருக்களின் அந்தியகாலத்துக்கென ஒரு காப்புறுதித்திட்டத்தை வகுத்துள்ளனர். இத்திட்டத்தின்படி வயோதிபர்களும் வியாதியால் இனிமேலும்சேவையாற்ற வியலாதவர்களுமான குருக்கள் தங்கள் அந்திய காலத்தை அமரிக்கையாகச்செலவிடப் பாதுகாப்பு இல்லங்கள் நிறுவப்படும்.

## ● பிலிப்பைன்ஸ்

பிலிப்பைனில் கடந்தவருடத்தில் கொலம்பான் சபைக்குருவர்களால் 68,236 ஞானஸ்நானங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டனவாம்.

தொகுப்பு: மடோனு


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 4157

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், கிட்டங்கித்தெரு
புளியடிஒழுங்கை
1. அந்தோனிமுத்து யோசெவ்
2. ஷைனர் பெண் லியியான்
— வழக்காளிகள்.

எதிராக, யாழ்ப்பாணம்
கிட்டங்கித்தெரு, இல. 130
1. வஸ்தியாம்பிள்ளை சவரிமுத்து
2. ஷைனர் பெண் ஞானம்மா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 4157-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆ ஆவணிமீ 11-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,500. ரூபா 2,000-க்குப் 18-7-1961 தொடக்கம் 15-11-1961 வரைக்கும் 18வீதமானவட்டியும், அதன்மேல முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமான வட்டியும், கோட்டுச்செலவு 185ரூபா 95 சதமும்.


> செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
> — 11-ம் பத்திநாத பாப்பரசர்


## காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று, பண்டத்தரிப்பு இறை "கலட்டி நெடுங்கலட்டி, நொங்கணை" பர. நில. இலா. எட்டு (பர. நில. இலா. 8). இதில் மேற்குப்பக்கமாய்ப் பர. நில. இலா. மூன்று (ப நி .இ. 3)-ம், கிணறும், தலைவாசலும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — இக்காணியின் மிகுதிஆதனம். வடக்கு — அந்தோனிப்பிள்ளை யேசுஸ்சுக்குரிய ஆதனம். மேற்கு — லியோனர் கைம்பெண் பிலிப்பாச்சிக்குரிய ஆதனம். தெற்கு — கையொழுங்கை. ஆனல், இக்காணியின் மிகுதிக் காணிக்கும், மற்றும் காணிகட்கு முரிய கிணற்றுப்பாகமும், தெற்குப்பக்கத்தில் கையொழுங்கையால் வழிவாய்க்கால் உரித்தும் பிறநீங்கல். இதன் பதிவு E 292/234.

வை, ஏரம்பமூர்த்தி,
காரைநகர் கொம்மிஷனர்.

1962-ம்ஆ ஆனிமீ 29-ந்திகதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 22 | ஞா. | இஸ்பிரீத்துசாந்து ஆக. பின் 6-ம் ஞாயிறு (வி. ம.) | ப |
| 23 | தி. | அர்ச். அப்பொலினர் | சி |
| 24 | செ. | ம. (காலதினம்) | ப |
| 24 | பு. | அர்ச். யக்கோபு அப்போஸ்தலர் (வி. ம.) | சி |
| 25 | வி. | தேவன்னையின் தாயாரான அர்ச். அன்னம்மாள் | வெ |
| 26 | வெ. | ம. (காலதினம்) | ப |
| 27 | ச. | அர்ச். நசாரியுஸ், செல்சுஸ், விக்ரர், இனோசென்ற் | சி |


# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு ஆடிமாதம் 22-ந் தேதி


## வழிகாட்டும் வல்லரசுகள்

கடந்தவாரம். மேற்குஜெர்மானிய அதிபர் கொன்ராட் அடினோர் பிரான்சுக்குச் சென்றார். பிரான்சிய அதிபர் சார்லஸ் தெ கோலுடன் அளவளாவினார். உலகப்பெரும்போரில் மரித்த வீரர்களின் சமாதியில் மலர்வளையும் மரியாதையும் சமர்ப்பித்தார். பிரான்சிய அதிபருடன் பொதுச்சந்தை, பேர்லின் பிரச்சனை, அத்திலாந்திக் சாசனம், பொதுவுடைமை எதிர்ப்பு என்ற கருமங்கள்பற்றிக் கலந்துரையாடினார்.

இருதேசங்களின் தலைவர்களும் கத்தோலிக்கர்கள். வயோதிபர்கள். அந்தியகாலத்தை ஆறுதலாகச் செல்விடவேண்டிய காலத்தில் நாட்டின் நன்மைகருதித் தொண்டாற்ற முன்வந்தவர்கள். தாங்கள் கொண்ட இலட்சியங்களிலும் கொள்கைகளிலும் அணுவளவும் பிசகாதவர்கள்.

ஆயின் இந்தமனிதர்கள் அரசோச்சும் நாடுகள், இரண்டாம் உலகயுத்தம் முடியும்வரை நாயும் பூனையுமாக வாழ்க்கை நடாத்தியவைதான். ஜெர்மானியும் பிரான்சும் ஏதோ ஒரு பிரச்சனையை வைத்துக்கொண்டு மோதிக்கொள்ளாமலிருந்த காலம் வரலாற்றிலேயே வெகு சொற்பம்.

கடந்த யுத்தத்தில் பிரான்சிய மக்களைத் தோல்வியுறச்செய்து தம்மையும் பிரித்தானியாவுக்குத் தஞ்சம்தேடி ஓட வழிவகுத்த ஒரு நாட்டின் தலைவனை வரவேற்கின்றோம் என்ற எண்ணம் சார்லஸ் தெ கோலுக்குத் தோன்றியிராதா? எமது மலர்வளையையும் மரியாதையையும் பெறும் இந்தவீரர்கள் போர்க்களத்தில் எங்கள் நாட்டவரை எதிர்த்துப் போராடி உயிர்நீத்தவர்கள் எனக் கொன்ராட் அடினோரின் உள்ளம் சுட்டிக்காட்டியிராதா?

எனினும் பண்டைய பகையை மறந்தனர். தங்கள் நாடுகளிடையே ஐக்கியம் நிலவவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். தமது வேற்றுமைகள் பொதுவுடைமை என்ற மாற்றானின் வளர்ச்சிக்கு வித்திட்டதை நன்கு சிந்தித்தனர். இருவரும் அதிகாலையில் திவ்விய பூசைக்குச் சமுகமளித்தனர். திருவிருந்தும் அருந்தினர். அமலனின் ஆசியுடன் தங்கள் கலந்துரையாடலை ஆரம்பித்தனர்.

சென்ற பெரும்போரில் இவ்விருநாடுகளும் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டன. திருச்சபையின் மூத்தபுதல்வி எனச்சிறப்புப்பெற்றது பிரான்ஸ். ஜெர்மானியும் மதவிடயங்களில் பிரான்சுக்கு இளைத்ததல்ல. நம் திருமறைக்கு உறுதுணையாக, அதன் சிறப்பிடங்களாக விளங்கிய இந்நாடுகள் போரின் அழிவைக்காண நேர்ந்தது எதனால்?

அளவுக்குமிஞ்சிய ஆசாபாசங்கள் தலைதூக்கின பிரான்ஸ்தேசத்தில். உலகுக்கு விதம்விதமான கேளிக்கைகளைக் கற்றுக்கொடுத்தது அந்நாடு. கடவுள் இல்லையென்ற நாத்திகம் தலைதூக்கியது ஜெர்மானியில். சர்வாதிகாரியொருவனே கடவுளாக மதிக்கப்பட்டான். எனவே இறைவனின் கோபாக்கினைக்கு இந்நாடுகள் பாத்திரமாயின.

இறைவனைமதியாது அவரின் பாதையிலிருந்து பிரிந்து தூரச்செல்லும் நாடுகட்கு இவ்விருநாடுகளினதும் கடந்தகாலநிலை ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும். நம் திருமறையின் இரு விழிகளாக பிரான்சும் ஜெர்மானியும் மீண்டும் விளங்கட்டும். அவற்றினிடையே இன்று தோன்றும் ஐக்கியம் என்றும் நிலவட்டும்.

## லத்தீன் அமெரிக்காவுக்கு ஒருகோடியே எழுபதுலட்சம் பவுண்

ஐந்து ஆண்டுத்திட்டமொன்றின்படி பரிசுத்தஸ்தானம் லத்தின் அமெரிக்க நாடுகளுக்குப் 1,70,00000 பவுண் அனுப்பவிருக்கிறது. பரிசுத்தபாப்பு செலவளிக்கவிருக்கும் இந்தப்பணம் உலகெங்குமிருக்கும் கத்தோலிக்க மக்களிடம் இரந்து திரட்டப் படவிருக்கிறது.

லத்தீன் அமெரிக்கநாடுகளுக்கு உதவியளிக்கஎன்று மெச்சிக்கோவில் ஏற்பட்டிருக்கும் பாப்புவின் ஸ்தாபனம் பணநெருக்கடியையிட்டல்ல, குருமார், கன்னியாஸ்திரிமார், இல்லறத்தொண்டர் தொகை குறைவாயிருப்பதை நிவர்த்திசெய்யவே அதிக சிரத்தையெடுத்து வருகிறது.

## தவழ்ந்து சென்றார் அவ...

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

கிடுத்தது. எனினும், "என் உயிரைப்பற்றிய எண்ணமேயில்லாமல், அந்தப் பரிதாப மனிதருக்காகச் செபித்துக்கொண்டு சென்றேன்" எனச் சுவாமியார் கூறினார்,



நமது மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள் திருநாமங்கொண்ட பெருநாள் நிகழும் ஆடித்திங்கள் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை என்பதைஅவரின் ஞானமக்கள் அனைவருக்கும் ஞாபகப்படுத்துகின்றோம். அன்று தினம் எல்லாம்வல்ல இறைவன் அவரையும், எமது மேற்றிராசனத்துக்காக அவர் ஆற்றிவருகின்ற தொண்டுகளையும் ஆசீர்வதிக்கும்படியாக நாமெல்லாம் ஒன்றுசேர்ந்து பிரார்த்திப்போமாக!

பாதுகாவலன் பேரால் ஆண்டவர் அவர்களுக்கு மனமுவந்த வாழ்த்து!

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு

தொடர்ச்சியாகப் பரலோக அப்பத்தைப் பெறுவதாலே நாம் அடையும் புதுச்சீவியம்தான் இன்றைய பூசையின் பிரதான அம்சமாக அமைகின்றது. அப்பங்களை அதிகரித்த புதுமையானது கடவுள் இயற்கையினதும், இயற்கைக்கு மேற்பட்டவைகளினதும் கர்த்தா என்று காட்டுகிறது. எனவே அவர் எமது அன்றாடச்சீவியத்திற்கும், ஞானசசீவியத்திற்கும் தேவையான அப்பத்தைத் தரவேண்டியவர்.

**செபமும் போதகப்பகுதியும் :**

முகவுரைச் செபமும் 27வது சங்கீதமும் எமதுஎசமான் கிறிஸ்து எமது பலம் என்பதைக்காட்டுகின்றது. கூட்டுச்செபம் நாம் நற்கருணைவழியாய் அடையவேண்டிய புதிய சீவியத்தைப் பற்றிக் கூறுகின்றது. வரப்பிரசாதத்தின் மறுமலர்ச்சிக்காகவும், எம் உள்ளங்களில் கடவுள் அன்பிற்காகவும் கூட்டுச்செபத்திலே குருவானவர் செபிக்கின்றார். நிருபமானது ஞானஸ்நானத்தினால் நாம் அடைந்த புதுச்சீவியத்தைப்பற்றிக் கூறுகின்றது. யேசு மரித்தார், ஆனால் உயிர்த்தார். இனி மரிக்கப்போவதில்லை. அதுபோலவே நாமும் பாவத்துக்கு மரித்து யேசுவுடன் உயிர்ப்போம். எமது இந்த உயிர்த்த சீவியத்தைப் போஷிக்கப் பரலோக அப்பம் உதவுகின்றது.

**நற்கருணைச் சடங்கு :**

சுவிசேஷத்தின்மூலம் எமது யேசுவின் வாஞ்சையை நாம் புதுப்பித்தது போன்று நாம் 'ஒப்புக்கொடுப்பின்' போது எம்மை முழுதும் கையளிப்பதைப் புதுப்பிப்போம். மௌனநேரத்தில் பீடத்தில் இருக்கும் யேசுவை ஆராதித்து எமக்கு அவரில் இருக்கும் அன்பைப் புதுப்பிக்கும்படி கேட்போம். நற்கருணைநேரத்தில் நாம் அவரோடு சரீரவிதமாய் ஒன்றுசேர்வோம். நற்கருணைக்குப்பின் செபத்தில் நாம் அடைந்துகொண்ட வரப்பிரசாதங்களினால் நாம் கழுவப்பட்டுக் காப்பாற்றப்பட உதவி கேட்போம்.

**சுருக்கமாக :** கடுகுவிதைபோன்று தொடங்கிய திருச்சபை எப்படி வளர்ந்து கிளைகள் பரப்பி நிற்கின்றதோ, அப்படியே நம் ஒவ்வொருவருடைய ஆத்துமத்திலேயும் கிறிஸ்துவின் இராச்சியம் வளர்ந்து பெருகுகின்றது. இன்றைய பூசையின் பிரதான அம்சம் எப்படி நமது புதிய வாழ்க்கையைப்பற்றிக் கூறுகிறதோ, அதையே நாம் எமது ஞானவளர்ச்சிப்பாதையில் ஞாபகமாக வைத்திருப்போம்.

### மரியாயின் சேனை

## விசேஷ அறிவித்தல்

மரியாயின் சேனை வெள்ளி யூபிலிவிழா நிகழும் ஆடிமாதம் 29-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு அர்ச். ஆசீர்வாதப்பர் கல்லூரியில் நடைபெறும். பொதுக்கூட்டத்திலும், சுற்றுப் பிரகாரத்திலும் பங்குபற்றவிருக்கும் எல்லா உதவி அங்கத்தவர்களும கல்லூரிமைதானத்தில் அன்று பிற்பகல் 4-15 மணிக்கு ஒன்றுசேருமாறு அன்பாக வேண்டுகின்றோம். அவ்வமயம் மகாவந். கொழும்பு அதிமேற்றிராணியார் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார். சொற்பொழிவு மூன்றுபாஷைகளிலும் நடைபெறும்.

**இலங்கை செனாத்துஸ் தலைவர்.**

### செப அப்போஸ்தலசபை வெளியீடு

#### ஆடி மாதம்

**பொதுக்கருத்து:** திருச்சபையின் பொதுச்சங்கத்தில் கலந்து கொள்பவர்கள் எல்லோருக்கும சர்வேசுரன் மிகுந்த ஞானஒளியை அளிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** மிஷன்நாடுகளில் வேதசம்பந்தமான கலைகளும், இலக்கியங்களும் தகுதியுள்ளவைகளாய்ப் பலன்தரும் முறையில் முன்னேற்றம் அடையும்படியாக மன்றாடிக் கொள்வது.

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும். பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார அர்ச்சியசிட்டவர்

## கன்னிமரியாயின் தாயார்

# அர்ச்சியசிஷ்ட அன்னம்மாள்

தேதி — ஆடி 26

### மகள் கொடுத்த பெருமை

அர்ச்சியசிஷ்ட அன்னம்மாளின் பெருமையைச் சுருங்கச் சொல்ல வேண்டுமானல் அது தேவனின் தாயாராகிய மரியம்மாளினல் வந்தபெருமையென்றே சொல்லவேண்டும். தேவனின் தாயைப் பெற்றெடுத்து வளர்த்த பெருமை அர்ச்சியசிஷ்ட அன்னம்மாளுடையது. இது பெறுதற்குஅரிய பாக்கியம். அதுமட்டுமா? கன்னிமரியம்மாள் தனது தாயாருடைய உதரத்திலே மாசில்லாது உற்பவித்தவர். இத்தகையவரின் தாயாய் தெரிந்து எடுக்கப்படுவதற்கு இவர் ஸ்திரிகளுக்குள்ளே விசேஷித்தவராய் இருக்க வேண்டுமல்லவா?

### குணவிசேஷங்கள்

அர்ச்சியசிஷ்ட அன்னம்மாள் தாவீது வம்சத்தில் உதித்தவர். பிறப்பிடம்பெத்தலேம். கற்புமிக்கவர். சிறுவயதிலே தன்னை முழுவதும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தவர். தேவனின் விசேஷ கிருபைகள் அவருக்குவாரி வழங்கப்பட்டன.



தேவ அருளினல் வேத அறிவு நிறையப்பெற்றிருந்தார். தனக்கு வரப்போகிற சம்பவங்கள் பலவற்றை நடக்கிறதற்கு முதலே அறியும் பாக்கியம்பெற்றவர். ஒத்த பத்தியும் ஆழ்ந்த தேவசிநேகமும் உடையவராகிய அர்ச்சியசிஷ்ட சுவக்கினை மணம்புரிந்தார். அதன்பின்பு அவர்கள் நசரேத்தில் குடும்பவாழ்வு நடத்தினர்கள். இக்குடும்பம் நசரேத்து ஊரிலே சகலருக்கும் முன்மாதிரியாய் விளங்கிற்று.

### தேவதாயாரின் பிறப்பு

திருமணஞ்செய்து 20வருட காலமாயும் புத்திரப்பேறு இல்லாததினல் அவர்களின் துக்கத்துக்கோ அளவில்லை. எனினும் தேவசித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படியும் மனம் இருந்தது. தேவன் அவர்கள்மேல் இரங்கினர். சம்மனசானவரால் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அன்னம்மாள் உதரத்தில் குழந்தையொன்று மாசில்லாமல்உற்பவிக்கும் செய்தியைக் கேட்டனர். மனம்பூரித்தனர். தேவனை வாழ்த்தினர். தம்மைத் தாழ்த்திக் கொண்டனர். செல்வப்புத்திரியும் பிறந்தாள். பெற்றோரதுமகிழ்ச்சிக்கோ அளவில்லை. மாசற்ற இக்குழந்தையின் பிறப்பினல் அவர்கள் அடைந்த வரப்பிரசாதங்களின் எல்லையை எவர்தான் கணிக்கமுடியும்?

### பிள்ளை வளர்ப்பு

தாம்பெற்ற இப்பிள்ளையைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்துவந்தனர். தமக்குக்கிடைத்த இந்தப் பேற்றுக்குத் தாம தகுதிஅற்றவர் என்பதே அவர்களது ஒரேஎண்ணம். தம்மைக் கூடியளவு தகுதிப்படுத்துவதே ஒரே முயற்சி. பிள்ளையைத் தேவனின் சித்தத்துக்குத்தக வளர்த்துவருவதே தமது ஒரே வாழ்க்கைப்பணியாகக் கொண்டு ஒழுகிவந்தனர். பாலிய பராயத்திலேயே தம்மைக் கோவிலுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தமது புத்திரி விரும்புவதை அறிந்துகொண்டு, பிரிவினல்வரும் துயரத்தைப் பொருட்படுத்தாது அவ்வாறே செய்துவைத்தனர்.

### மரணம்

வயோதிப காலத்திலே அர்ச்சியசிஷ்ட அன்னம்மாள் வியாதியாயிருந்து அவஸ்தைப்பட்டார். அச்சமையத்திலே கன்னிமரியம்மாள் தமதுதாயின் அருகிலிருந்து சகல பணிவிடைகளையும் செய்துவந்தார். இவ்வாறு அர்ச்சியசிஷ்ட அன்னம்மாள் பாக்கியமான மரணத்தை அடைந்தார்.

### எமது கடமை

பெற்ரேர் தமதுபிள்ளைகளை மாசற்ற தன்மையில் வளர்த்துவருவதில் விழிப்புடையவர்களாய் எவ்வாறு இருக்க வேண்டுமென்றும், விவாகம் செய்துகொண்டவர்கள் எவ்வாறு கடவுள் நேசத்தில் குடும்பவாழ்வு நடத்த வேண்டுமென்றும அர்ச்சியசிஷ்ட அன்னம்மாளின் சரிதம் எமக்குப் படிப்பிக்கின்றது.

## உங்களுக்குத் தெரியுமா?

- நித்திய நகர் என அழைக்கப்படும் வத்திக்கானில் எந்தப் பொருளையும் அது உபயோகமற்றதாயிருப்பினும் அல்லது பழையதாக உருமாறினுற்கூட எறிந்துவிடுவதில்லை. பத்திரமாகப் பாதுகாப்பது வழக்கமாகியுள்ளது.
- அர்ச். இராயப்பர் மகாலத்யதின் மேன்மாடியிலுள்ள களஞ்சிய அறைகளில் ஒன்றில் இம்மகாலயத்தைக் கட்டுவதற்குபயோகிக்கப்பட்ட மரத்தால் செய்யப்பட்ட மாதிரிக்கட்டிடத்தைக் காப்பாற்றி வருகிருர்கள். பிரபலஓவியர் மைக்கல் ஆஞ்சலோவினல் தயாரிக்கப்பட்ட கட்டிட அமைப்புக்கான மாதிரி இது.
- இந்த மாதிரிக்கட்டிட அமைப்பின் பக்கலில் மற்ருெரு மாதிரி அமைப்பையும் வைத்திருக்கிருர்கள். மைக்கல் ஆஞ்சலோவுக்கு முன்னர் வேறு பிரபல சித்திரவிற்பன்னர்களால் அர்ச். இராயப்பர் மகாலயத்துக்கென உருவாக்கப்பட்ட மாதிரிஅமைப்பு இது, மைக்கல் ஆஞ்சலோவினல் இத்திட்டம் மாற்றப்பட்டது. இல்லையேல் இராயப்பர்மகாலயம் இந்தமாதிரியின் பிரகாரமே கட்டப்பட்டிருக்கும்.
- ஆதியில் கொன்ஸ்தந்தின் சக்கரவர்த்தியால் அர்ச். இராயப்பர் கல்லறையின்மீது எழுப்பப்பட்ட ஆலயம் மிகப்பழுதான நிலையிலிருந்ததால் 1452இல் 5-வது நீக்கிலஸ் பாப்பரசர் புதியதோர் ஆலயம் அமைக்கும்பணியைத் தொடக்கிவைத்தார்.
- உலகிலுள்ள தேவாலயங்களுக்கெல்லாம் தாயாக, சத்தியதிருச்சபையின் உற்பத்தித்தானமாக அமைந்திருக்கும் இராயப்பர் மகாலயத்தை மிகப்பிரமாண்டமானதாக, கலைநுட்பம் நிரம்பியதாகக் கட்டிமுடிக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் மிகுந்திருந்தது. எனினும் மிகஆறுதலாகவே கட்டிடவேலைகள் மேற்கொள்ளப்பட்டன.
- 1506இல் இரண்டாம் யூலியஸ்பாப்பு பிறமான்தோ என்ற பிரபல சிற்பியிடம் கட்டிட அலுவல்களின் மேற்பார்வையை ஒப்படைத்தார். இப்போதிருப்பதுபோன்ற டோம் என்ற வில்மச்சுவளைவுடன் ஆலயத்தை நிறுவும் திட்டமொன்றை இச்சிற்சி செயல்படுத்தவாரம்பித்தார்.
- எனினும் இத்திட்டம் செயல்படுமுன் பிறமான்தோமரிக்க, இரப்பாயேல், முத்த சங்கெலா ஆகிய இருநிபுணர்களினதும் ஆலோசனைகள் கோரப்பட்டன. பத்தாவது சிங்கராய பாப்புகாலத்தில் ஓவியவிற்பன்னரும், கட்டிடநிபுணருமான இளைய சங்கெலா மேற்கூறிய இருநிபுணர்களின் ஆலோசனைகளையும் மேற்கொண்டு ஒரு புதிய திட்டத்தை வரைந்தார்.
- டோம் எனப்படும் வில்மச்சு மாடத்திலிருந்து பல தூண்களும் பிரித்துசெல்லும் இப்புதிய திட்டத்தில் இருபக்கங்களில் இரு மணிக்கூண்டுக் கோபுரங்களும் இடம்பெற்றன.
- மூன்ருவதுபோல் பாப்பரசரின் காலத்தில் ஓவியர் மைக்கல் ஆஞ்சலோ கட்டிட நிர்மாணப்பொறுப்பை ஏற்ருர். மணிக்கூண்டுக்கோபுரங்கள் கைவிடப்பட்டன. புதிய மாதிரி அமைப்புத் தோன்றியது. இதன்பிரகாரமே இன்றைய மகாலயம் தோற்றமளிக்கிறது.
- அக்காலத்தில் மிகப்பெரிய கட்டிடங்களை நிறுவுவதற்கு முன்னர் அதற்காய மாதிரிக்கட்டிடத்தை மரத்தால் அமைக்கும் வழக்கம் இருந்தது, அளவு நுணுக்கங்கள் பிசகாவண்ணம் மிகக்கவனத்துடன் இம்மாதிரிகள் செய்யப்படும்.
- இளைய சங்கெலாவின் மாதிரிஅமைப்புக் கட்டிடம் பத்தடி உயரமானது. பன்னிரண்டடி நீளமானது. அதை அமைக்க ஒன்பது வருடங்கள் சென்றன.
- மைக்கல் அஞ்சலோவின் மாதிரி அமைப்பைத் தயாரிக்கப் 15வருடங்கள் சென்றன. பத்துச் சிறந்த தச்சுநிபுணர்களின் தலைமையில் பல தொழிலாளிகளால் மிகச்சிரமத்துடன் அமைக்கப்பட்டது இது. அஞ்சலோ தமது மேற்பார்வையிலேயே ஒவ்வொரு சிறு வளைவுகளைக்கூட அமைத்தார்.
- இன்று இவ்விரு மாதிரிகளையும் பார்க்கும் நிபுணர்கள் சங்கெலாவின் முறைப்படி கட்டியிருப்பின் இராயப்பர் மகாலயம் இன்றைய கம்பீரமான தோற்றத்தைக் கொண்டிருக்காது எனக் குறிப்பிடுகின்றனர்.

சா. பெ.

## அற்புத வரவணிக்கம்


### அது

### மாசில்லா உற்பவத்தின் வரவணிக்கம்

### மேலும் அது

## பாதுகாக்கும் வரவணிக்கம்

1959-ம் ஆண்டில் ஒரு 'யெற் விமானம் ஓட்டி மாணுபத்தொன்றிலிருந்து அதி ஆச்சரியமான விதமாகத் தப்பிப்பிழைத்தான். ஐயாயிரம் அடி உயரத்திற் பறந்துகொண்டிருந்த அவனுடைய விமானம் சடுதியாகத் தலைகுத்துண்ண நிலம்நோக்கி மணிக்கு ஆயிரம்மைல் வேகத்தில் வந்து. நிலத்தில் மோதியது. விமானம் பொரிப் பொரியானது. விமானஓட்டியோ எவ்வித அபத்து ஒன்றுமின்றிப் பூரண சுகத்துடன் வெளியேவந்தான்.



தன் கழுத்தில் இருந்த புதுமை வரவணிக்கமே தன்னைக் காப்பாற்றினது என்று சொல்லிவருகிருன்.

1959-ம்ஆண்டு எனது கணவர் ஒரு 'லொறி' சாரதி. இரண்டு இரவுகள் அடுத்தடுத்து இவர் உறக்கமின்றி 'லொறி' ஓட்டிக்கொண்டிருந்து மூன்ருவது இரவும் அதே தொழிலுக்கு அத்தியாவசியம் போகவேண்டியிருந்தது எனினும் சற்றுநேரம் தூங்கிவிட்டு வேலைக்குப்புறப்பட்டார். லொறியைச் செலுத்தத்துவக்கினர். சொற்பநேரத்துள் தன்னையறியாமலே கண்ணயர்ந்துவிட்டார். அவர் செலுத்திய லொறியோ மிகப்பழுவானது; எரிபொருட்கள் ஏற்றியிருந்தது; லொறிபோய் ஒரு சுவரில் மோதியது;' இவர் ரோட்டில் தூக்கிவீசப்பட்டார்; இவர் இருந்த ஆசனம் உடைந்து நொருங்கியது; எரிபொருளில் தீப்பிடித்துக்கொள்ளவில்லை; எனது கணவனுக்கு ஒரு [illegible] டாகவில்லை.

எமது பிள்ளைகள் அன்பளிப்பாகக் கொடுத்த புதுமை வரவணிக்கமொன்றை அவர் கழுத்தில் அணிந்திருந்தார். அந்த வரவணிக்கத்தின் மூலமாகவே தன்னைப் பரிசுத்த கன்னிமரியாய் காப்பாற்றினர் எனக் கூறுகிருர்.

"மோட்டோர்" சாரதிகளே உங்கள் வாகனங்களில் அர்ச். கிறிஸ்தோப்பர் வரவணிக்கம் தொங்கவிடப்பட்டிருக்கிறதல்லவா? மிகநல்லது. அத்துடன் ஒரு புதுமை வரவணிக்கத்தையும் சேர்த்துக்கொண்டால் கூடிய நன்மை உண்டு.

புதுமைவரவணிக்க வியாபிப்பு நிலையம்
[illegible]மா கோவில்,
கொழும்பு—10.

### நன்றியறிதல்

பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள், அர்ச். செபஸ்தியார், அர்ச். ஸ்நாபகஅருளப்பர்முதலியோரின் எல்லையில்லாத அனுக்கிரகத்தாலும், வண. கொப்பனட்சுவாமி, வண மைக்கேல் புரோசுவாமி இவர்களின் இரக்கத்தாலும், நான் இழந்தவேலையை மீண்டும் பெற்றுத்தந்ததற்காக இவர்களின்நாமம் உலகெங்கும் பரவும்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

தாளங்குடா கே. பி. நாதன்

---

ரோசாப்பூவானது தனது நிறத்தையும் வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றது. மனிதனே இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே,

வருகிற வாரத்தில் இலங்கையெங்கனுமுள்ள மரியாயின் சேனையார் தங்களது வெள்ளியூபிலியைக் கொண்டாடுகிருர்கள். தன்னைப் பரிசுத்தப்படுத்தவும் பிறருக்கு உதவவும் இச்சைனியத்தைப்போலச் சிறந்ததோர் சேவை வேறில்லை.

உங்கள் கிராமங்களில் மரியாயின் சேனையுண்டா? அதில் நீங்கள் அங்கம் வகிக்கின்றீர்களா? மரியாயின் சைனியத்தின்மூலம் எங்கள் ஆடவர்களிற் பலர் நம் சத்தியமறைக்குச் சிறந்ததொண்டாற்றிவருகிறதை நான் கண்ணுரக் காண்கிறேன். ஆடவர்கட்கு நாங்கள் இளைத்தவர்களல்ல என்பதைக் காட்ட வேண்டாமா? உங்கள் கிராமத்தில் மரியாயின் சைனியம் இல்லாவிடில் பங்குக்குரவருடன் கலந்து ஒன்றை ஆரம்பியுங்கள். இருந்தால் நீங்களும் அதில்சேர்ந்துகொண்டு மற்றைய பெண்மணிகளும்சேர உதவுங்கள்.

அன்புச் சோதரிரோஜா.

## அல்லலுறும் அரிவையரே இதோ........

உலகத்தில் துன்பதுரிதங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. ஆடவரைவிடப் பெண்டிரேஇவற்றை மனதிற்போட்டு அளவுக்குமீறி அங்கலாய்ப்பது வழக்கமாகிவிட்டது. எனவே கத்தோலிக்க பெண்களாகிய நாம் இத்துன்பங்களில் நமக்காகப் பரிந்துபேசக்கூடிய அர்ச்சியசிட்டர்களைக் கண்டிபிடிக்க ஆவல்கொள்ளுகிறோம். இதையே திருச்சபையும் வற்புறுத்திவருகின்றது. பெண்களாகிய நமக்கு ஏற்படும் பலதொல்லைகளில் உதவிபுரிதற்கு திருச்சபை நியமித்துள்ள சில புனிதர்கள் இங்கே தரப்படுகின்றனர்.

### துறவறத்தைநாடும் இள நங்கையரே

நீங்கள் யேசுவின் சிறிய புஷ்பமாகிய அர்ச். சின்னத்தெரேசாளின் உதவியை நாடுங்கள். தனது பதினுருவது வயதிலேயே கார்மேல்மடத்தில் சேர்ந்துவிட அயராது முயற்சிசெய்து முடிவில் பாப்பாண்டவரையே நேரில் கண்டு உத்தாவுபெறமுனைந்து ஈற்றில் வெற்றிகண்ட வீரப்பெண்மணியல்லவா அவள். நீங்கள் சிறுசிறு விஷயங்களில் அக்கறையெடுத்து அவற்றைத் தேவனுக்குகந்த மலர்களாக மாற்றி உம் துறவற வாழ்வைப் பலனுள்ளதாக்கித் தனது அறையிலிருந்தபடியே செபத்தொண்டினுல் அநேக ஆத்துமங்களை யேசுபக்கமாகத் திருப்பிய அவள் முன்மாதிரியையும் க்ண்டுபாவியுங்கள். திருநாள் ஐப்பசி 3.

### இல்லறவாழ்வில் தகுந்த துணைதேடும் வனிதையரே

தேவகன்னிகையின் திருப்பத்தாவான அர்ச். சூசையப்பரிடம் போங்கள். நாம் அவனுடன் கேட்டவற்றை அர்ச். சூசையப்பர் அடைந்துதாமல் போவதில்லைஎன அர்ச். பெரியதெரேசம்மாள்கூறும்உறுதிமொழியைமனத் திருத்துங்கள். அவர் உலகினுதித்த அத்தனைபெண்களின் கற்பனைக்குமெட்டாத அலங்கிர்தவடிவும், புண்ணிய வாழ்வும் கொண்ட தேவதாய்க்குத் தகுந்த மணாளனாக, கையிலேந்திய பட்டதடி தழைத்து லீலிமலர்கள் மலர்ந்து தேவனால் தெரியப்பட்டவர் என்ற சிறப்பையும் பெற்றவரன்றோ. சூசையப்பரிடம் செல்லுங்கள். உங்களை அவர் புறக்கணிக்கவே மாட்டார். திருநாள் பங்குனி 19.

### பிரசவத் தாய்மார்களே

உங்கள் தேகநிலை எப்படியாயினும் சரி, எவ்வளவு கஷ்டமான பிரசவமாயினும்சரி தீவிரித்துஉதவும் ஒரு புனிதரை அறிமுகப்படுத்துகிறோம். தென் இத்தாலியில் துறவியாகவாழ்ந்த அர்ச். ஜெராட் மஜெல்லாதான் அப்புனிதர். பிரசவத்தாய்மாரின் பாதுகாவலர். தாய்மார்கட்கு அவர்கள் சுகமாகப் பிரசவிக்க உதவிசெய்தற்கு விசேட அனுக்கிரகம் பெற்றவர். மேலைத்தேசத்தில் நாளாந்தம் எத்தனையோ தாய்மார் இவர் உதவியை நாடியதால பிரசவ கஷ்டங்களில் சுகம்பெற்றனர். எனவே சுகப்பிரசவத்தின் அர்ச்சியசிட்டவர் என இவர் போற்றப்படுகின்ருர். இவ்வுதவிகளுக்கு நன்றியாக அன்னையர்கள் தங்கள் செல்வங்கட்கு ஜெராட், ஜெரால்டின், ஜெரால்டாசமஜெல்லா என்ற பெயர்களைச்சூட்டி இவரின் பாதுகாவலில் அவர்களை ஒப்படைக்கின்றனர். பிரசவத்தை எதிர்நோக்கும் மங்கையரே ஜெரால்ட்மூலம் அனுக்கிரகம்பெற்று மகிழுங்கள். திருநாள் ஐப்பசி 16.

### மக்கட் செல்வத்துக்காக ஏங்கும் மங்கையரே

தேவஅன்னையின் தாயாரான அர்ச். அன்னம்மாளின் ஆதரவு உங்கட்கு உண்டு. மலடி என மற்றையோரால் இகழப்பட்டுத் தனதுமுதிர்ந்த வயதில் கடவுள் அருள்பாலிக்கப்பட்டுத் தேவதாயை ஈன்றெடுத்தவள் உங்கள் ஏங்கும் இதயங்கட்குச் சாந்தியளிப்பாள். இதனுலன்ரே இப்புனிதைக்குச் சந்தானமாதா என்ற சிறப்புப் பெயரும் உண்டு. நம்பிக்கையை நழுவவிடாது அர்ச். அன்னம்மாளை நோக்கி மன்ருடுவீர்களாக. திருநாள் ஆடி 26.

### துன்மார்க்ககணவனுடனும், மூர்க்கரான புதல்வர்களுடனும் அல்லலுறும் அரிவையரே

அமலன் யேசுவின் முண்முடிக்காயம் தன்நெற்றியில் பதிய வரம் பெற்ற அர்ச். றீத்தாவிடம் ஆறுதலடையுங்கள். மனைவியாகவும், தாயாகவும் எவ்வித உபசரணை செய்தபோதும் அவளை ஏறிட்டு நோக்காது குடிவெறி சூதாட்டங்களில் ஈடுபட்டது மாத்திரமல்ல, அவளை வதைப்பதிலும் இன்பங்கண்ட கணவனுடனும் மக்களுடனும் பொறுமையாக வாழ்க்கை நடத்தி ஈற்றில் அவர்களை மனந்திருப்பிய இம்மங்கையருள் மாணிக்கம் உங்கள் வேண்டுகோளைத் தப்பாது யேசுவின் பாதத்தில் சமர்ப்பித்து அநுகூலமடைந்து தருவாள். திருநாள் வைகாசி 22.

ஈற்றில் ஒன்றைமட்டும் மறந்துவிடாதீர்கள். கேட்டவரங்களை அடைந்துவிட்டீர்களா? உங்களுக்கேற்படும் மகிழ்ச்சியில் இப்புனிதர்களை மறந்துவிடாதீர்கள், நன்றிசெலுத்துங்கள். மற்றையோருக்கும் இப்புனிதர்களை அறிமுகப்படுத்துங்கள். நன்றி மறப்பது நன்றன்று அல்லவா?

## சிரித்தமுகம் வேண்டுமடி பெண்ணே

சிரித்துக்கொழு என்பது பழமொழி. எனினும் ஆடவரை மயக்கும் நாகரீகச் சிரிப்பையும்,ஏமாற்றிப் பணம்பறிக்கும் சாகசச்சிரிப்பையும், மற்றையோரைப் பரிகசிக்கும் கேலிச்சிரிப்பையும் பற்றி இங்கு விபரிக்கவில்லை. ஆனுல், உள்ளம் நிறைந்த, கள்ளங் கபடமற்ற சிரித்த முகம்தான் பெண்களுக்கு வேணடும் என்று கூறவந்தேன்.

பெண்களின் சேவைகளோ அளப்பில. ஆயின் எத்துறைச் சேவையிலும் புன்னகை ஒளிவீசும் அவள் முகமே உலகிற்கு மேலான சேவையளிக்கிறது. நேரம் நான்குமணியா? அடுத்தவீட்டை எட்டிப்பார்ப்போமே.

கணவன் காரியாலயத்திலிருந்து களைப்புடன் வருகிருன். மனைவியின் கையில் தேநீர். ஆயின் முகமோ களையிழந்து கிடக்கிறது. காரணம் என்ன? எதிர்வீட்டு மாலா அணிந்திருந்த தேன்நிலவு சாறிதான் உள்ளத்தைக் குழப்பிவிட்டது. அதை வாங்கித்தா வேண்டுமென்று அடம்பிடிக்கிருள். கணவனே கையில்வாங்கிய தேநீரை வீசிவிட்டு ஆத்திரத்துடன் வெளியே கிளம்பிவிடுகிருன். துன்பம் தோன்றுகிறது இருவர்க்கும்.

அதோ ஒரு வயற்காணி. உழவனொருவன் உழுதுகொண்டே நிற்கிருன். மதிய வெயில் அவனை வாட்டிவிட்டது. தலையிலே புல்லுக்கூடையும், கையிலே மோர்ச்செம்புமாக இன்முகத்துடன் தெம்மாங்குபாடிக் கொண்டு வருகிருள் அப்பட்டிக்காட்டானின் மனைவி. உழவை நிறுத்தித் துணைவியின் புன்னகையில் லயித்துவிடுகிருன் உழவன். அவனது களை பறந்துவிடுகிறது. அன்புக்கரங்கள் இன்பமுடன் தரும் மோரை அருந்துகிருன். அங்கே இன்பம் மிளிர்கிறது.

மற்ருெரு இல்லம். பாடசாலை முடிந்து குழந்தைகள் ஓடிவருகின்றனர் வீடுநோக்கி. அம்மா என்றகுரல் கேட்டதும் வாசலுக்கு வருகிருள் அன்னை. அவர்கள்களைப்பைப்போக்கப் பலகாரங்களும், பானமும் தருகிருள். "அம்மா எனக்குக்கணக்கில் 100புள்ளி கிடைத்ததுஎன்கிருள் எட்வீனு. உச்சி மோந்து தட்டிக்கொடுக்கிருள் அந்த அன்புத்தாய். அம்மா என்னுடைய சிலேற் உடைந்துபோய்விட்டது; ரீச்சர் அடித்தா என்கிருன் கடைக்குட்டி ஜெருட். அப்படியா, நாளைக்கு அப்பாவிடம் சொல்லி வாங்கித்தருகிறேன் என அவன் அழுதகண்ணீர் துடைக்கிருள். மக்கள் மனம மகிழ்கின்றனர்.

ஒரு பாடசாலைக்குச் செல்வோம். ஆசிரியை மலர்ந்த முகத்துடன் வகுப்பினுள் நுழைகிருள். காலைவந்தனம் பரிமாறப்படுகிறது. ஆசிரியையின் மலர்ந்த முகமும், இனிய பேச்சுகளும் மாணவர் தம் வீட்டுக் கஷ்டங்களையும் மறந்துவிடச்செய்கின்றன. அவர்களும் முழுமனதுடன் பாடத்தில் ஈடுபடுகின்றனர். ஆசிரியையில் அன்பும் காட்டுகின்றனர். ஆயின் சிடுசிடுத்த முகமும், கடுகடுத்த பேச்சுங்கொண்ட ஆசிரியரில் எந்தக்குழந்தை அன்பு வைக்கும்?

ஆஸ்பத்திரியை நாடுவோம். அங்கு வாடாமுகத்துடன் பணியாற்றும் தாதியர்களிடம் நோயாளர்கள் மனம்விட்டுப் பழகுகின்றனர். வானவீதியிற் பறந்துசெல்லும் விமானத்தில் பணிப்பெண்ணின் இன்முகத்துக்கு இணையானதுண்டோ? அவள் அன்புடன் செய்யும் உபசரணைகள் பிரயாணிகளைக் கவர்ந்துவிடுகின்றன.

அபலைகளை அன்புடன் ஆதரிப்பவள் பெண். ஏழைகளுக்கு இன்முகத்துடன் தானம்வழங்குபவளும் அவளே. பெண்ணின் புன்னகையிற்ருன் உலகம் மலர்கிறது. அவள் மனம்கோணில் முகம் வாடும். முகம் வாடின் அவளை எதிர்பார்த்துநிற்கும் அத்தனை இதயங்களுமே வாடிவிடும். எனவே,

"சிரித்த முகம் வேண்டுமடி
பெண்ணே—அதுதான்
சேவை செய்யும் பெண்களுக்கு
அழகுதரும் கண்ணே."

## கனிஷ்டபாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சை கார்த்திகை — 1962

வடமாகாண ஆசிரியசங்கத்தினுல் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 10-9-62-க்கு முன்பாகவும், தனிப்பட்டபரீட்சார்த்திகளிடமிருந்து 1-8-62-க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்

பரீட்சைக்குழு உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:

தலைவர்: திரு. C. வைரமுத்து,
வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

காரியதரிசி: திரு. A. இராசசிங்கம்,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

உபகாரியதரிசி: திரு. C. குணபாலசிங்கம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

1963-ம் ஆண்டுக்குரிய பாடத்திட்டங்கள், புத்தகங்கள் ஆதியனபற்றிய கருத்துக்களை 28-7-62-க்குமுன் தெரிவிக்கும்வண்ணம் கல்லூரிஅதிபர்களும், மற்றையோரும் வேண்டப்படுகின்றனர்.

**பரீட்சை சம்பந்தமான கடிதங்கள்யாவும் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.**

C. குணபாலசிங்கம்,
உபகாரியதரிசி,
வ. மா. ஆ. ச. பரீட்சைக்குழு.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய், 10-7-62.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 28-ந்தேதி சனிக்கிழமை பி. ப. 4மணியளவில் நடைபெறும். அவ்வேளை சிலசகோதரர்கள் தமது நவாப்பியாசகாலத்தை முடித்து வாக்குத்தத்தம் எடுப்பார்கள். ஆகவே, எல்லோரும் கூட்டத்தின்போது தமது சபைஅங்கிகளை அணியக்கடமைப்பட்டிருக்கிருர்கள் என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். வாக்குத்தத்தம் எடுப்போர் நேரகாலத்தோடு வந்து தமது அங்கிகளை அணிந்து ஆயத்தமாயிருக்க வேண்டும்.

A. S. FRANCIS of MARY,
சபைக்கர்த்தருக்காக

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் பல ஆண்டுகாலம் கொடிய வியாதியான (வலிப்பு) வியாதியாற் பீடிக்கப்பட்டு எத்தனையோ டாக்டர்கள் உதவியை நாடியும் பிரயோசனமில்லாமல், இறுதியாகச் சதாசகாய மாதாவின் தலைமைப் பீடமான பொரளைக்குச்சென்று ஓர் நேர்த்தி செய்து, ஒவ்வொரு புதன்கிழமையும் என்னுல் இயன்ற ஒறுத்தல் முயற்சி செய்து வந்தமையால், பரிசுத்த ஆண்டவரின் பெரிதான இரக்கத்தால் இந்நோய் என்னைவிட்டகன்றது. ஆகவே, இதை என்நேர்த்தியின்படி இதில் பிரசுரிக்கிறேன். இன்னும் என்னில் மறைந்திருக்கும் சில நோய்களும் முற்ருக அகலப் பரிசுத்த சதாசகாயமாதாவை இரந்து மன்ருடுகிறேன்.

ஏ. ஜே. சவிரிநாயகம்
தலவாக்கொல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 4272**

வட்டுக்கோட்டை கிழக்கு
முருகேசு சின்னத்தம்பி
— வழக்காளி.

எதிராக

அனைவரும் வட்டுக்கோட்டை கிழக்கு
1. ஆறுமுகம் முருகேசு
2. முருகேசு கந்தையா
3. தம்பு சுப்பையா
4. பெண் நாகம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 4272-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1962-ம்ஆு ஆவணிமீ 11-ம்திகதி (11-8-62) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூ. 1,390-75-ம். இதற்குத் தீர்வை ரூபா 1,000-க்கு 22-9-61திகதிதொடக்கம், 25-1-62 வரையும் 100-க்கு 9வீத வட்டியும், பின் முழுத்தொகையும் இறுக்கும்வரைக்கும் 5வீத வட்டியும். கோட்டுச்செலவு ரூபா 215-65.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்மேற்கு, வட்டுக்கோட்டை கோவிற்பற்று, வட்டுக்கோட்டை கிழக்கு இறை 'தம்பசெட்டி' பரப்பு நிலஇலாச்சம் 3. வீடும், கிணற்றில் பங்கும், வான்பயிர் செய்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கும், வடக்கும் — கையொழுங்கை. மேற்கு — ஆறுமுகம் அம்பாத்தையின் ஆதனம். தெற்கு—ஒழுங்கை. இது அடங்கலில் சொரியலாக 5/6 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

**சி, செ, மாரிமுத்து,**
கொமிஷனரும், விலமதிப்பாளரும்
விதானைவளவு, சித்தன்கேணி,
28-6-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3975**

தொல்புரம்
கணவதிப்பிள்ளை சின்னப்பு
— வழக்காளி.

எதிராக

சுளிபுரம்
சின்னத்தம்பி கைம்பெண் ஆசையம்மா
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3975-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1962-ம்ஆு ஆவணிமீ 13-ம்திகதி (13-8-62) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 1,427-ம். இதற்குத் தீர்வை ரூபா 1,373-க்கு 30-3-61 திகதி தொடக்கம் 25-10-61வரை 100-க்கு 8 வீத வட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீதவட்டியும், கோட்டுச் செலவு ரூபா 185-47.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்மேற்கு, பண்டத்தரிப்புக் கோயிற்பற்று, சில்லாலை இறை "பள்ளவயல்" பரப்பு நெல்லு இலாச்சம் 15. இதற்கு எல்லை: கிழக்கு—வெள்ளவாய்க்கால். வடக்கு—பிருஞ்சிப்பிள்ளை கைம்பெண் திரேசம்மாவின் ஆதனம். மேற்கு—சின்னத்தம்பி கைம்பெண் ஆசையம்மாவின் ஆதனம். தெற்கு—செல்லத்துரை கைம்பெண் தங்கத்தின் ஆதனம். இது அடங்கலும். பதிவு இல E. 226 / 265.

2. ஷை சங்கானை இறை "பள்ளன்காடு" பரப்பு நிலஇலாச்சம் 12-ம், ⅔ குளியும். இதற்கு எல்லை: கிழக்கு—கதிர்காமு பெண் தங்கத்துக்கும், பங்காளருக்கும். விலாயுதர் அமரசிங்கத்துக்குமுரிய ஆதனங்கள். வடக்கு—தம்பையா பெண் தெய்வானையின் ஆதனம். மேற்கு— விசுவநாதர் நவசிவாயத்தின் ஆதனமும், கையொழுங்கையும். தெற்கு — கையொழுங்கையும், தம்பாப்பிள்ளை பெண் அன்னம்மாவுக்குரிய ஆதனமும். இது அடங்கலும், பதிவுஇலக்கம் E 176/130

**சி. செ. மாரிமுத்து**
கொம்மிசனரும், விலமதிப்பாளரும்.
விதானைவளவு, சித்தங்கேணி. 29-6-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3482**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

வட்டுக்கோட்டை
இராசா சோமசுந்தரம் —வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், நாவாந்துறைறோட்
பிரதானவீதி (Main Street)
57-ம் இலக்கத்திலுள்ள
1. சேகுசுல்தான் அப்துல்காதர் முகம்மது சதக்கத்துல்லாவும்
2. மனைவி மைமூனும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3482-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்வரும் ஆதனத்தையும், அதற்குச் சேர்ந்தவைகளையும்1962-ம்ஆண்டு ஆவணிமாதம் 18-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் அந்த ஆதனத்துக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,000-மும், 21-12-57 தொடக்கம் தீர்வைத்திகதியாகிய 1-3-61வரைக்கும் அத்தொகைக்குப் 18வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும்இறுக்கும்வரை 5வீத வட்டியும், கோட்டுச்செலவு 208ரூபா 97சதமும். இக்கோட்டுச்செலவில் ரூபா 100 கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

நொத்தாரிசு V. சிவசுப்பிரமணியம் முகதாவில் 19-5-57-லும், 7-7-57-லும் 3241-ம் இலக்கத்தில்முடிந்த உறுதிப்படி பாதிக்கப்பட்டகாணியின் எல்லாஉரித்தும், சொத்துச் சோந்தைகளும்.

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை "புளியடி"என்னும் காணித்துண்டுமுழுதும் நிலப்பரப்பு ஒன்றும், குளி ஆறரையும் (நி. ப. 1, குளி 6½). (நி. ப. 1, குளி ⅞என்றும் காட்டப்பட்டுள்ளது. பதிவிலக்கம் யாழ்ப்பாணம் D 196|249.) கல்வீடும், கிணறும், பயிர்களும், மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — முகலீன் லெவ்வையின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு — சாகுல் ஹமீத்முகம்மத்லெவ்வையின் கைம்பெண் முகம்மத் பாத்தும்மா நாச்சியாவுக்குரிய ஆதனம். தெற்கு — சாகுல் ஹமீத் முகம்மது லெவ்பையின் கைம்பெண் முகம்மத் பாத்தும்மாநாச்சியாவுக்குரிய ஆதனமும், நாவாந்துறை றோட்டும். பதிவிலக்கம் D 256/241.

2. 7,10 குதிரைப்பலமுள்ள (H.P.) அரிசிகுத்தும் யந்திரமும், மேற்குறித்த காணிக்குள் நிறுவப்பட்டுள்ள B 4337 74-ம் இலக்கமோட்டரும் (Motor), அதற்குள்ள துணைக்கருவிகளும்.

**அ. வெற்றிவேலு,**
கொமிஷனர்.
இல. 19, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம். 9-7-62.

---

திருமதி
**சவிராசி மார்கு அவர்களின்**

## 3-ம்வருட மரணஞாபகம்

**பிறப்பு:** 20-4-82 **இறப்பு:** 21-7-59

மூவாண்டு நகர்ந்ததுவே
தாயே எங்கள்
உள்ளமதில் மூண்டகனல்
நீங்கவில்லை
நீராண்ட கண்களோடு
நெஞ்சம்வெந்து
நீருகிப் போகுமுன் உம்
நினைவுபோமோ

இவ்வுலகைவிட்டு மறைந்தும், எமது மனதைவிட்டு அகலாது என்றும் எம் நெஞ்சத்திடனேயிருக்கும் எங்கள் அன்னை சவிராசி மார்கு அவர்கள் இப் பூவுலகை விட்டு மறைந்து மூன்றுவருட

கட்டுரை II.

# மனை மாட்சி

இரத்தினம் நீண்டநேரமாய்க் கையில் சரித்திரப்பாடக்குறிப்பை வைத்துக்கொண்டு திருப்பித் திருப்பி உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ன அப்படிப்பார்க்கிறாய்?" என்று அப்பா கேட்டதும், குறிப்பைக் கொண்டுவந்து காட்டி, "பள்ளிக்கூடப் பாடந்தான்," என்றான்.

அப்பா வாங்கிப்பார்த்துவிட்டு, "இது என்ன பாஷை?" என்று கேட்டார்.

"ஏன்? தமிழ் தான்! நான் என்ன செய்ய! எங்கள் சரித்திர ஆசிரியர் வாயுவேகம், மனோவேகத்தில் பாடம் போதிக்கிறார்; அதை அப்படி அப்படியே சுருக்கமுறையில் கிறுக்கி வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது" என்று சமாதானம் சொன்னான் இரத்தினம். "தமிழ்ச் சுருக்கெழுத்தைப் படித்துக்கொண்டால் எல்லாம் இலேசாகிவிடும்" என்றார் மூத்தண்ணர். "இப்போது வழங்கும் சுருக்கெழுத்து முறைகள் வருமுன், தமிழில் சுருக்கெழுத்து இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். வருடம், திகதி, ஆண்டு, மேற்படி, வரவு, பற்று முதலிய சொற்களைச் சுருக்கி எழுதினார்களல்லவா?" என்று அப்பா சொன்னார். "இலங்கையில் சம்பத்திரிசியார் கல்லூரியில் அந்நாட்களில் தமிழ்ச் சுருக்கெழுத்துச் சொல்லிக் கொடுத்தார்களாம். உண்மையா இச்செய்தி"? என்று கேட்டான் சத்தியநாதன்.

வண. டன் சுவாமியார், மேற்படி கல்லூரியின் அதிபராயிருந்தபோது, தமிழில் சுருக்கெழுத்துப் படிப்பிக்கப்பட்டதாம்; அந்நாட்களில் அதற்கு மதிப்பில்லாமற்போகவே அதை நிறுத்தி விட்டார்களாம் என்று அப்பா சொன்னார்.

"இந்த டன் சுவாமியார் தமிழ் ஆங்கில அகராதியும் எழுதினாராமே"? என்றார் அம்மா. "பள்ளிக்கூடத்தில் கைக்கு அடக்கமான ஒரு சிறு அகராதியைக் கண்டேன்" என்றான் இரத்தினம்.

"அகராதிகளைத் தமிழில் முதலில் எழுதியவர் அப்பா யார்"? என்று புஷ்பராணி கேட்டாள். "பொது அறிவுப் போட்டி ஏதாகிலும் நடக்கப்போகிறதா" என்றான் சத்தியநாதன். "அதற்கென்ன? போட்டியில் ஏன் நான் கலந்துகொள்ளக் கூடாது?" என்றாள் புஷ்பராணி. மற்றவர்கள் ஆச்சரியத்தோடு அவளைப்பார்த்துக் கொண்டு நின்றனர். "அகராதிகளை முதன்முதல் நமதுநாட்டுக்கு அறிமுகம் செய்தவர்கள் கிறிஸ்தவர்களே. வீரமாமுனிவரைப்பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? அவர்தான் தமிழில் சதுர் அகராதி என்னும் பெயரோடு தமிழ் அகராதியை முதல் எழுதினார். அதற்குப்பிறகு பல தமிழ் அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ்ச் சொற்களுக்குப் பொருள்காணத் தமிழ்-ஆங்கில அகராதிகளும், பிரான்சு-தமிழ், இலத்தீன்-தமிழ், போர்த்துக்கேசியம்-தமிழ் அகராதிகளும் பலப்பல கத்தோலிக்க, புரட்டஸ்தாந்த கிறிஸ்தவர்களால் எழுதப்பட்டன" என்றார் அப்பா.

"சில காலத்துக்கு முன் அமெரிக்க மந்திரிகளில் ஒருவராயிருந்த டலஸ் என்பவரின் முன்னோரில் ஒருவர் இலங்கையில் தமிழ் அகராதி எழுதினாராமே" என்றார் மூத்தண்ணர். "யாரோ டேப் விட்டிருப்பான்" என்றான் இரத்தினம். "உன்னைப்போலச் சோம்பேறிகளுக்கு உண்மைக்கும், கட்டுக்கதைக்கும வேற்றுமை எங்கே தெரியப்போகிறது?" எனப் பெரிய ஒரு போடு போட்டார் மூத்தண்ணர். "யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் உவின்சிலோ என்ற பெயருடைய ஓர் அமெரிக்க கிறிஸ்தவத் தொண்டர் இருந்தார். அவர் அமெரிக்க மந்திரிகளில் ஒருவராய் விளங்கிய டலஸ் என்பவரின் முன்னோர்தான். அவர் அருமை பெருமையான தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதியைத் தொகுத்தார். டலஸ் இலங்கைக்குவந்தபோது உவின்சிலோ அகராதியின் பிரதி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது" என்று அப்பா சொன்னார்.

"அகராதி என்றதும் நினைவு வருகிறது; சிலர் பழம்புத்தகங்களைச் சேகரிப்பதில் பைத்தியமாய் அலைகிறார்கள்; எங்கள்வீட்டில்ஏதாவதுபழையதமிழ்ப் புத்தகங்கள் இருக்கின்றனவா? என்று அப்படிப்பட்ட ஒருவர் கேட்டார்" என்று சத்தியநாதன் சொன்னான். "பழைய தமிழ் நூல்களைச் சேகரிப்பதும் நல்ல ஒரு தமிழ்த்தொண்டாகும். அல்லாவிட்டால் எத்தனையோ அரிய நூல்கள் அழிந்து போய்விடும். ஒரு சிலர் அருமையானபுத்தகங்களையும், ஏடுகளையும் அவற்றின் அருமை தெரியாமல் விறகாய் எரித்துப்போட்டார்கள். இன்னொருசிலர் வைக்கோற்பட்டடை நாய்போல நல்லநூல்களைப் பயன்படுத்தாமல் வைத்திருக்கிறார்கள். பழைய புத்தகங்களை மாத்திரமல்ல அச்சேறாமல் இருக்கிற நாட்டுப்பாடல்கள், வேதவகைப்பாட்டுக்

(தொடர்ச்சி மறுபக்கம்)

---

## முதல்வருட மரணஞாபகம்



**பிறப்பு:** 3-6-1926 **இறப்பு:** 23-7-1961

ஊர்காவற்றுறை, உதயதிசை திரு. சஅந்தோனிப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வன் செல்வன் ஜியோட்ஜ் ஹென்றி யூலன் மரணமடைந்து ஒருவருடம் பூர்த்தியாகின்றது. இவரை நாம் எங்கள் உயிர்போல் நேசித்துவந்தோம். இப்பொழுது இவரைஇழந்து ஆற்றொணாத்துயரம் அனுபவிக்கிறோம்.

இதனைக்கண்ணுறும் இனசனர், அன்பர்கள்யாவரும் இவருடையஆன்மா சாந்தி அடைய மன்றாடிக்கொள்ளும்படி தயவாய் வேண்டுகின்றோம்.

இவருடையபிரிவாற்றாமல் பரதவிக்கும்
பெற்றோர், சகோதரர்கள்

உதயதிசை,
ஊர்காவற்றுறை.

---

நினைவுதினம் 21-7-62-ல் பூர்த்தியாகிறது. அன்றுகாலை 6-30மணிக்கு நவாலி சம்பேதுருவானவர் ஆலயத்தில் இவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காகஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளையும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளையும், அன்புள்ள கிறிஸ்தவர்களையும் இவவின் ஆத்தும நித்தியஇளைப்பாற்றிக்காகவேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அரிய தாயின்பிரிவால் துயருறும்
பிள்ளைகள்:

சிஸ். மேரி காமலின்டா, பி. றோசமுத்து, கு. ஞானப்பூ, ச. அன்னம்மா, மா. அருளம்மா (ஆசிரியை).

பேரப்பிள்ளைகள்:

சிஸ். மேரி இலாயஸ், பி. செபமாலையம்மா (ஆசிரியை), ஜே. மேரிதிரேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

## பொன் உள்ளங்கள் வேண்டும்

சின்னரோமைக்குப் போகிறேன். வருகிறீரா என நண்பர் கேட்டார். மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டேன். இலவச மோட்டார்ச்சவாரி. அத்துடன் பலவருடகாலத்துக்குப்பிறகு சின்னரோமைக்குச் செல்வதில் ஒரு மகிழ்ச்சி. சிறுவனாக இருக்கும்போது அன்னையுடன் ஆண்டுதப்பாது சில்லாலைக்குச் சற்பிரசாதத்திருநாளுக்குச் செல்வது உண்டு. இப்போது சின்னரோமை எந்தநிலையில் இருக்கிறது என்று அறியவும் அவா.

மோட்டார்வண்டி பிரேதக்காலையைத் தாண்டிச்சென்றது. மூச்சந்தியில் இளவட்டங்கள் சிலர் சிவப்புக் கொடியுடன் வழிமறித்தனர். நிறுத்து மோட்டாரை எனவும் கலாட்டசெய்தனர். சின்னரோமைச் சிறுவருக்கும் புரட்சி எண்ணங்கள் தோன்றிவிட்டதா என அஞ்சியவண்ணம் இறங்கினோம். சுற்றுப்பிரகாரம் வரப்போகிறது, வண்டிகளெல்லாம் மறிக்கப்படல்வேண்டும் என்பது குருநாதரின் உத்தரவு என 144 போட்டனர். இது புரட்சிக்கூட்டமல்ல கிறிஸ்துவின் தொண்டர்கள் என நண்பர் கூறினார். வண்டியைப்பூட்டிவிட்டு ஆலயத்துக்குச் சென்றோம்.

ஏராளமான மக்கள் திவ்வியநற்கருணை நாதரின் பவனியில் கலந்துகொண்டனர். சின்னரோமையைச் சேர்ந்த இளங்குருவொருவர் நற்கருணைநாதரைச் சுமந்துசென்றார். இக்காட்சியைக்கண்டு ஆனந்தக்கண்ணீர் விட்டனர் அக்குருவரின் பெற்றோர்கள். ஆலயமுன்றிலில் ஒரு சொற்பொழிவு. பொற்பாத்திரங்களில் சற்பிரசாதநாதரை எழுந்தருளச்செய்கிறோம். ஆயின் அவர்விரும்புவது எங்கள் பொன்னான உள்ளங்களை எனக்கூறினார் வண. மரியாம்பிள்ளை அடிகளார். ஆலயமுன்றிலில் அளிக்கப்பட்ட சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் விழா முடிவுற்றது.

## வத்திக்கானில் வெடிகுண்டு

உலகிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களனைத்தினதும் அன்னையென மதிக்கப்படுவது ரோமாபுரியின் அர்ச். இராயப்பர் மகாலயமாகும். உலகின் மிகப்பெரிய தேவாலயம் என்ற சிறப்பும் உண்டு. பல சிறந்த ஓவியர்களின் கலையழகுநிரம்பிய சித்திரங்கள், சிற்பங்களை அங்குகாணலாம்.

இவ்வாலயத்தைப் பலதடவைகள் சதிகாரர்கள் நாசகார குண்டுகளால் அழிக்க முற்பட்டிருக்கின்றனர். அண்மையிலும் இவ்வித சதிச்செயலொன்று நடைபெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுளது. ஆலயத்துக்கு வழிபாடியற்றச் சென்றோருடன் சதிகாரரும் புகுந்து வெடிகுண்டொன்றை வைத்துவிட்டு வெளியேறிவிட்டனர். ஆலயக்கதவுகள் சாத்தப்பட்ட சிலமணிநேரத்தின் பின் குண்டு வெடித்தது. ஆயினும் அதிக சேதம் ஏற்படவில்லை.

## இலவச சேவை

நியூசிலாந்திலிருந்து வெளிவரும் சிலாந்தியா, டபிளற் என்ற சிறந்த கத்தோலிக்க வாரசஞ்சிகைகளின் கடந்தகால பிரதிகளை இலவசமாகப் பெற விரும்புவோர் தபாற்செலவுக்காக (பார்சல்) 35சத தபால் தலைகளுடன் இம்முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

மரியன்னை நூல்நிலையம், ஜசிந்தா லொட்ஜ், பண்டத்தரிப்பு.

## நகைச்சுவை

இளைஞரான கப்பற்படையதிகாரியொருவர் விடுமுறைக்காக விண்ணப்பித்தார். தலைமையதிகாரி அவ்விளைஞரை அழைத்தார்.

உங்கள் விண்ணப்பத்தில் "உதவி செய்ய" என்று குறிப்பிட்டுள்ளீர். யாருக்கு உதவிசெய்ய விரும்புகிறீர்?

"எனது அயல்வீட்டிலுள்ள கன்னிப்பெண்ணுக்கு"

"எவ்வித உதவிசெய்யப் போகிறீர்?"

"அவளுக்கு நாளைக்குத் திருமணம். என்னை மாப்பிள்ளையாக இருக்கும்படி கேட்டிருக்கிறாள். நானும் சம்மதித்திருக்கிறேன்."

## றீகல் படமாளிகையில்

கார்மலாயிட்ஸ் என்ற திரைப்படம் பற்றி முன்னர் இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தோம். கத்தோலிக்க திரைப்படங்களில் சிறந்தது எனப் பாராட்டும் பரிசும்பெற்ற இத்திரைப்படம் 27-7-62 வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் றீகல் படமாளிகையில் திரையிடப்படும். பிரான்சிய அரசியற் புரட்சியின்போது கார்மேல் கன்னியர்கள் ஆற்றிய சில வீரச்செயல்களை இப்படம் சித்திரிக்கிறது.

## நிராகரிக்கப்பட்டவள்

தள்ளிவிடப்பட்டகல்லே மூலைக்கல்லாக உதவியது என சுவிசேஷத்தில் ஒருவாக்கியமுண்டல்லவா? இங்கு நாம் தரும் புனிதையும் நிராகரித்து வைக்கப்பட்டவர்தான்.

அந்த இளநங்கை துறவறம்பூண்டு இறைவனுக்குச் சேவைசெய்ய ஆசித்தாள். பல கன்னியர்மடங்களின் சிரேஷ்டர்களையும்கண்டு பேசினாள். அவளது சுகத்தாழ்வு காரணமாக வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. எனவே சின்னஞ்சிறு குழந்தைகளை ஒன்றுதிரட்டி ஞானோபதேசம் கற்றுக் கொடுப்பதில் முனைந்தாள்.

ஒருமுறை நித்தியநகருக்கு யாத்திரை சென்றவள் பாப்பரசரின் பேட்டியையும் பெற்றாள். அவளது வரலாற்றைக்கேட்ட தந்தை, அமெரிக்காவுக்குச்சென்று திருமறைப் போதனையிலீடுபடுமாறும், எந்தக் கன்னியர் குழுவாவது அவளைச்சேர்த்துக்கொள்ள மறுப்பின் அவளே ஒரு கன்னியர்சபையைத் தொடக்கலாமெனவும் ஆலோசனை தெரிவித்தார்.

அங்ஙனமே அவள் அமெரிக்கா சென்றாள். ஒரு கன்னியர்சபையை நிறுவினாள். 67வயதில் அவள் மரிக்கும்போது ஒவ்வொன்றும் பத்துலட்சம்ரூபா மதிப்புள்ள மருத்துவமனைகள், கல்லூரிகள், அனாதர் சாலைகள், 67ஐ அவளது கன்னியர்சபை பரிபாலித்தது.

இப்புனிதையின் நாமம் அர்ச். பிரான்சிஸ் சேவியர் கபிறினி என்பது.

## மனைமாட்சி

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

கள், பெரியார்களின் கடிதங்கள் முதலியவற்றைச் சேகரிப்பதும் அரிய தமிழ்ப்பணியாகும்'' என அப்பா சொன்னார்.

அத்தான் மணிக்கூட்டைப்பார்த்துவிட்டு, "சை! மரியதாசுக்கு இன்றைக்கும் பதில் எழுத முடியாமல் போய்விட்டது'' என்றார். அக்கா சிரித்துக்கொண்டே, "இவர் நண்பர் அப்பா யாழ்ப்பாணத்தில் ஒரு கைத்தொழிற்சாலை நிறுவ உத்தேசமாம். இவரிடம் யோசனை கேட்டிருக்கிறார். இவர் என்ன எழுதுவது என்று தெரியாமல் முழிக்கிறார்'' என்று கூறினாள்.

"உங்களுடைய நண்பன் நல்லது செய்ய நினைக்கிறார் [illegible] உற்சாகம் அளியுங்கள்'' என்றார் அப்பா.

மறைமுதல்வன்.

# சத்தியத்தின் சாட்சிகள்

அதிகாலை இரண்டு மூன்று மணியிருக்கும். ஒரு வாலிபன வெகு வேகமாக உரோகணக்காட்டுக்குள் ஓடிவந்துகொண்டிருந்தான். அவன் முகத்தில் அச்சமும், பீதியும் நிறைந்திருந்தன. நெடுந்தூரம் ஓடிவந்ததினால் பெருங் களைப்புடன காணப்பட்டான். இளைத்துக் களைத்தபோதிலும், அச்சம் பீதியினால் இடையிடையே அவனுடைய கால்கள் தடுமாறியபோதிலும் ஓட்டத்தின் வேகம் குறையவில்லை. முடிவில் அடர்ந்த அவ்உரோகணக் காட்டில் காணப்பட்ட நாலைந்து குடில்களின் முன்வந்து நின்றான். அவற்றில் ஒரு குடிலினுள் சென்று, "சுவாமி" என்று இருமுறை குரல் கொடுத்தான். சுவாமி வெளியே வந்தார். வந்த வாலிபன் மிகுந்த பயத்துடன் மிக இரகசியமான செய்தியொன்றைக் கூறினான். அவன் கொண்டு வந்த செய்தி இதுதான். "குருவே! மன்னன் விமலதர்மன் கத்தோலிக்க சமயத்தவர்கள் உரோகணத்தின் அடர்ந்த காடுகளிலே ஒளித்து வாழ்கிறார்களென அறிந்து அவர்களை உரோகணத்தில் தேடிக் கொல்லும்படி வீரருக்கு ஆணை பிறப்பித்துள்ளான். இன்று அல்லது நாளை அரசனின் வீரர் உரோகணத்தை அலசித் தேடவருவார்கள். இங்கிருப்பது ஆபத்து. எனவே, மாறுவேடத்தில் உரோகணத்தை விட்டு வெளியேறிக் கொஞ்சக்காலமாவது மறைந்திருங்கள். நீங்களும் இங்கிருக்கும் மற்றைய கிறிஸ்தவ குடும்பங்களும் வெளியேறிவிட வேண்டும். வேந்தன் ஆணைபிறப்பித்ததை நானே நேரில் கேட்டேன்'' என்றான். அவன் கூறிய இச்செய்தியை அங்கு விமலதர்மனின் வேதகலாபனைக்குப் பயந்து ஒளித்துவாழ்ந்த ஏனைய கிறிஸ்தவர்களும் ஆவலுடன் ஓடிவந்து நின்று கேட்டுத் திகைப்பும் பயமும் அடைந்தனர்.

மன்னன் விமலதர்மன் தான் சூழ்ச்சியாகப் பெற்ற அரசுரிமையை நிலைநாட்டி ஸ்திரப்படுத்த, மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகப் பெரும்பான்மைப் புத்தசமயிகளான தன் பிரஜைகளின் ஆதரவை வேண்டிக் கத்தோலிக்க மதத்தினரைத் துன்புறுத்தி, புத்த சமயத்தின் பேராதரவாளனாக விளங்க விரும்பினான். வேதகலாபனை நடைபெற்றது. உயிரைப் பறிகொடுத்தனர் பலர். உரோகணக் காட்டுக்குள் உறைந்தனர் சிலர். ஆனால், இப்பொழுது உரோகணக் காட்டுக்குள் உறைந்தவர்களுக்கும் ஆபத்து வந்துவிட்டது. பற்பல வேடங்களில் அந்த இருப்பிடத்தைவிட்டு ஒளிப்பிடம் தேடிப் புறப்பட்டனர்.

குருவானவரும் செய்தி கொண்டு வந்த வாலிபனும் ஒரு திசையில் விறகு வெட்டிகளாகக் கோடரிகளுடன் சென்றனர். சிறிது தூரத்தில் ஏதோ அழுகுரல் கேட்டது. குருவானவர் உதவிசெய்யச் சப்தம்வந்த திசையை நோக்கி விரைந்தார். ஆனால், வாலிபன் நேரத்தைப் போக்கினால் அரசனின் வீரர்களிடம் சில சமயம் அகப்படக்கூடும் என்று எச்சரித்து, சீக்கிரத்தில் வேறு பிரதேசத்தையடைய வேண்டும் என்று எச்சரித்தான். ஆனால், அவனுடைய எச்சரிக்கையை இலட்சியம் செய்யாது குருவானவர் அழுகுரல் வந்த திசையை நோக்கி ஓடினார். அங்கே அவர் கண்ட காட்சி ஓர் அரசாங்க வீரன் ஒரு காடியிடம அகப்பட்டு அலறியடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. குருவானவர் விரைந்து அந்தக் கோடரியால் காடியை அடித்துக் கொன்று அவனுக்கு உயிர்ப்பிச்சையளித்தார். எதிர்பாராது வந்து தனக்கு உதவிய அந்த விறகு வெட்டியைக் கட்டி அணைத்துத் தன் நன்றியைச் செலுத்திவிட்டுச் சென்றான் அந்த வீரன்.

இரண்டு மூன்று வாரங்கள் சென்றன. விமலதர்மனுடைய ஒற்றர்களின் கழுகுப்பார்வையில் குருவானவர் கண்டுபிடிக்கப்பட்டார். ஞாயிறுபூசை அதிகாலை வேளையில் ஒரு மறைவிடத்தில் நிறைவேற்றிக் கொண்டு இருந்தபோது குருவானவரும், அங்கு சமுகமளித்திருந்த கிறிஸ்தவர்களும் பிடிக்கப்பட்டனர். திங்கள் சூரியயோதய வேளைக்குமுன் கொன்று உடலைக் கம்பத்தில் குத்திக் கோட்டை வாசலில் குருவானவரை ஏனைய கிறிஸ்தவர்களுக்குப் படிப்பினையாகத் தொங்கவிட வேண்டுமென்று மன்னன் விமலதர்மன் கட்டளையிட்டான். ஈட்டியால் குத்திக் கொல்வதற்கு நேரம் வரும் வரையும் அவரைச் சிறையிலடைத்தனர். இரவு உணவாகக் காய்ந்த ரொட்டித் துண்டுகளையும், ஒருசிறு குவளையில் தண்ணீரும் கொண்டு சென்றான் வீரன். குருவானவருக்குக் கிட்ட உணவைக் கொண்டுபோய்க் கொடுக்கும்போது அவருடைய முகத்தை ஏறிட்டு நோக்கினான். எங்கோ கண்ட முகம்போல் இருக்கிறதே என்று சந்தேகத்துடன் அவரை ஊடுருவிப் பார்த்தான். குருவானவர் அவனை அடையாளம் கண்டுகொண்டதற்கு அறிகுறியாகப் புன்னகை புரிந்தார். அந்த வீரன் வேறுயாருமல்ல, குருவானவரினால் உயிர்ப்பிச்சையளிக்கப்பட்ட அதே வீரன். அவனும் அடையாளங் கண்டு கொண்டான். அவருடைய முகத்தில் காணப்பட்ட ஒருவித அருட்பிரகாசம் அவனை ஈர்த்தது. "குருவே! இரவோடிரவாகத் தப்பிப்போய்விடுங்கள்; நான் அதற்கான வழியைச் செய்கிறேன்'' என்றான். அதேசமயத்தில் வாசற்படியில் ஓர் நிழலாடி மறைந்தது. சில மணித்தியாலங்களாகச் சம்பாஷித்துக்கொண்டிருந்துவிட்டு அவன் வெளியேறப்போகும் தருணத்தில் அரசாங்க காவலர் சிலர் விலங்குடன் வந்து அவனுக்கு அதை மாட்ட முயன்றனர். கேட்டதற்கு இராஜ துரோகக் குற்றச்சாட்டின்கீழ் கைதுசெய்யும்படி மன்னன் ஆணை என்றனர். கைதுசெய்ய வந்தவர்களைச் சில நிமிடங்கள் பொறுத்துக்கொள்ளும்படி கூறிவிட்டுக் குருவானவரிடம் தனக்கு ஞானஸ்நானம தரும்படி கெஞ்சினான். குருவானவரும் சில அவசிய சத்தியங்களை எடுத்துச்சொல்லி ஞானஸ்நானம் கொடுத்தார்.

திங்கள் அதிகாலையில் இருவருடைய மார்பையும் ஈட்டிகள் துளைத்துச் சென்றன. இருவரையும் கொன்று கோட்டைவாயிலில் தூக்கும்படி கட்டளையிட்டான் மன்னன். அவனுடைய ஆணை நிறைவேற்றப்பட்டது. மக்கள் பலர் கோட்டை வாயிலில் கூடிநின்று வேடிக்கை பார்த்தனர். ஆனால் சத்தியத்தின் சாட்சியாய், திருமறையின் ஒளிவிளக்காய், யேசுவின் மேல் கொண்ட கனிந்த காதலால் கம்பத்தின் உச்சியிலே தொங்கிய அவ்வுடல்களைக் கண்டு, இதுவரையும் கிறிஸ்தவ சமயத்தில் சேராதபலரும் அதில் சேர்ந்ததை மன்னன் அறிவானா? இறந்த ஒவ்வொரு கத்தோலிக்கனின் ஒவ்வொரு துளி இரத்தமும் திருச்சபை என்னும் விளைநிலத்தைச் செழிப்பாக்கிப் பலலாயிரக்கணக்கான மக்களை மனந்திருப்பியதை மன்னன் தடுக்க முடிந்ததா?

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday July 22-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org